

MADRAS
204
3. ஏ.

# விருந்து

மாதம் ஒரு புத்தகம்

பதிப்பாசிரியர் :

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை M. A., L. T.,

முதல் புத்தகம் ஜுலை 15-ல் மலருகிறது.

விலை அணா 8

அடுக்கடுக்காக நூல் நிலையங்களிலே காட்சியளித்துக் கொண்டிருக்கும் அண்டை நாட்டு இலக்கியச் செல்வங்களை, நல்ல தமிழில் செந்தமிழர் இல்லந் தோறும் தோற்றுவிக்க, விருந்து திங்கள் தோறும் வருகிறது. தித்திக்கும் தேன் கவிதைகள்! சுவை மல்கும் முழு நாவல்கள்! கருத்தாழம் ததும்பும் சிறு சிறு கற்பனைக் கதைகள்! கலை நயம் மிளிரும் இன்பமயமான கட்டுரைகள்! ஆக உலக இலக்கிய அறிஞர்களின் சபாமண்டபமாக விருந்து மிளிரும். விருந்தோம்புதலில் மேம்பட்டோர் உயர் தமிழர், விருந்தின் உறுபயனை உணர்வார்!

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

மற்ற விபரங்கட்கு :

பொன்னி லிமிடெட், சென்னை—21.


ஆடும் மாடும்
டி. கே. சீனிவாசன்
வரையும் தொடர் சித்திரம்
10–8–51
இதழில்
தொடங்குகிறது



சுந்தரம்
தமிழ்
கூட்டாளியைக் கெடுக்க
நினைக்கிறான் கூட்டாளி...
அதற்காக அவன் கொலை
செய்யவும் தயங்கவில்லை...
கடைசியில் தானே அழிகிறான்
ஜே.ஆர்.ரங்கராஜுவின் துப்பறியும் நவீனம்
M.S. PICTURES
MADRAS.14
சென்னையிலும் தமிழ்நாட்டிலும்
......விரைவில் வெளிவருகிறது....
G.H.RAC
ஸ்ரீ சுகுமார்
....தயாரிப்பு....
எம்.எஸ்.பிக்சர்ஸ்
....வெளியீடு....
டைரக்ஷன்
A.T.கிருஷ்ணஸ்வாமி,B.A.,

மலர் 5 | ஜுலை 10, 1951 | இதழ் 9

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஆனித் திங்கள் 26-ம் நாள்

| | | |
|---|---|---|
| நல்ல மருந்து | .... பக்தவத்சலம் | 3 |
| மீண்டும் சுவர் எழும்புகிறது | .... கார்ட்டூன் | 4 |
| | .... தலையங்கம் | 5 |
| புதுமைப்பித்தன் | .... காலமும் கருத்தும் | 6 |
| புகையிலையும் புதுமைப்பித்தனும் | ... விந்தன் | 9 |
| யாருக்கு உங்கள் வாக்கு ? | ... பொதுமேடை | 17 |
| அன்னை | .... கோமேதகவேலு | 18 |
| பெண்கள் முன்னேற்றம் | .... மங்கை | 26 |
| மரண தண்டனை | .... புதுமைச்சித்தன் | 30 |
| டம், டம், டமாரம் | .... டி. ஜே. இன்பராஜ் | 39 |
| இன்பக் குழவி | .... முடியரசன் | 42 |
| சிமோனின் தகப்பன் | .... வாணிதாசன் | 44 |

## நல்ல மருந்து

**படிக்கும்போது மாத்திரம் சுவையளித்துப் பிறகு மனதிலிருந்து மறைந்துவிடுகின்ற கதைகள் எத்தனையோ வெளிவருகின்றன. ஆனால் புதுமைப்பித்தனின் கதைகள் அத்தகையவையல்ல. அவை சிரஞ்சீவியானவை. தனி மனிதரின் நோய்க்கு வைத்தியர் மருந்து கொடுப்பது போல் சமூக நோய்க்குப் புதுமைப்பித்தன் மருந்து கொடுத்தார். அது இனிப்பான மருந்து. நன்மை தரும் மருந்து. உலகோர் போற்றிப் புகழும் கலைஞர்கள் பலர் நம் நாட்டில் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களது குடும்பங்கள் வறுமையில் ஆழ்ந்திருக்கின்றன. குடும்ப நலனை நினையாமல் கலை வளர்ச்சியிலேயே அவர்கள் முழுக் கவனத்தையும் செலுத்தியதுதான் இதற்குக் காரணம். அந்தக் கலைஞர்களின் அற்புதச் சிருஷ்டிகளை அனுபவிக்கும் ரசிகர்கள்தான் அவர்களது குடும்பங்களுக்கு உதவி செய்யவேண்டும். கலைஞர்களுக்கு நாம் செய்யவேண்டிய கைம்மாறு இது.**

[சென்னை கோகலே மண்டபத்தில் 2—7—51-ல் நடைபெற்ற புதுமைப்பித்தன் நினைவுநாள் கொண்டாட்டத்தின்போது மராமத்து-செய்தி இலாகா அமைச்சர் திரு. பக்தவத்சலம் இவ்வாறு குறிப்பிட்டார்.]


மீண்டும் சுவர் எழும்புகிறது!
38 வது அட்சரேகை

பத்திரிகைகளின் எழுத்துரிமையைப் பறிக்கும் வகையில் இந்திய அரசியலமைப்பு திருத்தப்பட்டுவிட்டது. அகில இந்தியப் பத்திரிகையாளர். சங்கம் தக்க எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது ஜூலை இரண்டாவது வாரத்தில் பத்திரிகைகளை வெளியிடுவதில்லையெனத் திருப்பத்தூர் எழுத்துரிமை மாநாட்டில் முடிவு செய்திருக்கிறார்கள். 'பொன்னி' தன் அதிருப்தியைப் புலப்படுத்துவதற்காக இந்த இதழைத் தலையங்கமின்றி வெளியிட்டிருக்கிறது.

# புதுமைப்பித்த...

புதுமைப்பித்தன் மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஆண்டுதான் அவர்மீது தமிழ் எழுத்தாளர்களுக்குக் 'கருணை' பிறந்திருக்கிறது! சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் அவருடைய விழாவை அமைச்சர் பக்தவத்சலம் தலைமையில் சென்னையில் கொண்டாடியிருக்கிறது. புதுமைப்பித்தன் குடும்ப நிதிக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் — ஒரு நிதிக் குழு நிறுவப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சியான செய்தி!

தோழர் நாரண துரைக்கண்ணன் முன்கூட்டியே இப்படியொரு முயற்சி தொடங்கினார்! அது வெற்றி பெறவில்லை. "பருவத்தாலன்றிப் பழா" என்ற முறைப்படி இப்போதுதான் அந்த நல்ல காரியத்திற்கு விடிவு காலம் வந்திருக்கிறது போலும்! அல்லது புதுமைப்பித்தன் மீதிருந்த பொறா-



புது...பித்தன்

மையும் வெறுப்பும் மறைய, அவர் மறைவுக்குப் பின்னரும் மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டன என்று வைத்துக்கொள்ளலாம். என்னவிதமாகவோ நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது! எழுத்தாளர்கள் ஒன்றுபட்டுப் பயனுள்ள காரியங்களில் ஈடுபடுகிறார்கள்!

புதுமைப்பித்தன் கலைஞராக வாழ்ந்தார்; கலைஞராகவே மறைந்து விட்டார். இலக்கியத் துறையில் தன் பங்கை உறுதி செய்துகொண்ட அளவு, வாழ்க்கையில் தன் பங்கை உறுதி செய்துகொள்ளத் தவறிவிட்டார் என்றே சொல்லவேண்டும். ஏறக்குறைய இருபது ஆண்டுகள் எழுத்துத் துறையில் இருந்த அவர், இருநூறுக்கு மேற்பட்ட கதைகளைத் தமிழுக்குச் 'சொத்து'ப் போல் விட்டுச் சென்ற அவர், தம் குடும்-

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
15 7796

… த … ழ் … சா…ம்' கவனித்துக்கொள்ளும் என்று நம்பி மறைந்ததுதான் துயரம் தரும் சேதி! அவருடைய வாழ்நாளிலேயே, அவர் பெயரில் பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. 'தினமணி' 'தினசரி' போன்ற பிரபல பத்திரிகைகளிலே உதவி ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். சினிமாத்துறை வேறு அவருடைய உழைப்பைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்படி எல்லாமிருந்தும், அவர் வாழ்க்கை வளமாக விளங்கவில்லை; வறுமை அவரை அலைக்கழித்தது என்று அவரோடு பழகியவர்கள் கூறும்பொழுது, "பாழும் தமிழ்நாட்டில் எழுத்தாளன் நிலை இது! இது!" என்று ஓலமிடுவதைத் தவிர, வேறு சமாதானம் என்ன கூற முடியும்! "தயவு தாட்சண்யம் அவரிடம் எதிர்பார்க்க முடியாது; யாராயிருந்தால் என்ன? உண்மையை அப்பட்டமாகக் கூறுவார்; தலை நிமிர்ந்து நிற்பார்" என்று புதுமைப்பித்தனைப்பற்றி வர்ணிக்கும்போது பூரிக்கும் நாம், "தமிழுக்கு நான் சேவை செய்திருக்கிறேன்; எனக்குத் தமிழர்கள் உதவக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனக்குப் பொருளுதவி செய்யும்படி அவர்களிடம் கேள்" என்று தம் நண்பருக்குக் கடிதம் எழுதினார் என்னும் செய்தியைப் படிக்கும்போது, இணையற்ற …ர்களையும் மூன் …ும் 'பிச்சைக்காரர் …ாக்கும் தமிழகப் போக்கை எண்ணி "அவமானம், அவமானம்" என்றே அரற்றவேண்டியிருக்கிறது!

புதுமைப்பித்தனிடம் தன்னம்பிக்கை களிநடமிடும் என்று கூறக் கேட்டிருக்கிறோம். ஒரு சமயம், தமிழில் வெளிவந்துள்ள சிறந்த ஏழு சிறுகதைகளைப் பொறுக்கி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்று யாரோ அவரிடம் சொன்னபோது "அந்த ஏழு கதைகளும் என்னுடையதாகத்தான் இருக்கும்" என்று அவர் கூறினாராம். இந்த வார்த்தைகளில் சுடர்விடும் தன்னம்பிக்கையை அவருடைய கதைகளைப் படித்தவர்களே நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

தமிழில் சிறுகதை இலக்கியம் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது; எத்தனையோ புது எழுத்தாளர்கள் தோற்றம் பெற்று வருகிறார்கள்! இந்தச் சூழலைக் கவனிக்கும்போது, புதுமைப்பித்தன் சிறுகதைகள் எந்த அளவு உயர்வுடையவை என்று நாம் தெரிந்துகொள்ள முடிகிறது! ஒரு தடவை படித்து முடித்ததும் மறந்துவிடத்தக்க கதைகளே பல வெளிவருகின்றன. அக்கதைகளில் மீண்டும் படிக்கும்படியாகச் சில வரிகள்கூடக் காணப்படுவது அரிது! ஆனால் புதுமைப்பித்தன் எழுத்துக்களில் மீண்டும் மீண்டும் படிக்கத்

தக்க 'இடங்க... மின்னுவதைப் ப... கிறது. அவர் அம்பாபிக க... களையும், மேல் நாட்டுக் கதைகளையும் உப்புச் சப்பற்ற மாதிரியில் கதைத்துக்கொண்டிருக்கவில்லை; கவிதை அளவுக்குக் கற்பனைச் செறிவும் சிந்தனை வேகமும் உணர்ச்சிப் படப் பிடிப்பும் இருக்கும்படித் தம் கதைகளை உயிர்ச் சித்திரங்களாக வடித்திருக்கிறாரென்றால் அது மிகையாகாது! எனவேதான் புதுமைப்பித்தன் வாழ்நாளிலும் அவற்றைப் படித்தோம்; அவர் மறைந்த பின்னர் இப்பொழுதும் படிக்கிறோம்; இனியும் என்றென்றும் தமிழர்கள் அவற்றைப் படித்து மகிழத்தான் செய்வார்கள்!

புதுமைப்பித்தன், கதைகள் எழுதியதோடு தம் இலக்கியப் பணியை நிறுத்திக்கொள்ளவில்லை. விமரிசனக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்; உலக இலக்கியங்களைத் தமிழருக்கு அறிமுகப் படுத்தும் பணியிலும் ஈடுபட்டிருந்தார்; சில நாவல்களையும் உருவாக்கியிருக்கிறார்; 'வேளூர்க் கந்தசாமிக் கவிராயர்' என்ற புனைபெயரில் கவிதைகளும் புனைந்திருக்கிறார். இவற்றுக்கெல்லாம் மேலாக அவர் ஒரு நல்ல 'கிரிடிக்' ஆகவும் விளங்கினார். வறுமையும் காசநோயும் அவரை அண்டாமல் இருந்திருக்குமானால், பெர்னாட்ஷா அளவுக்கு உலகப் போக்கையும் மனித இயல்பையும் 'விமரிசனம்' செய் யா... இயல்பு; எவரையும் மதியாத தறுகண் ஆண்மை; எவருடைய எழுத்தையும் தராசில் எடை போடத் துணியும், யாருக்கும் கட்டுப்படாத மனோபாவம்; எதையும் நையாண்டி செய்யும் பண்பு—இக்குணங்கள் அனைத்தும் புதுமைப்பித்தனிடம் காணப்பட்டன. அதனால்தான் அவர் சிறந்த விமரிசகராக விளங்கினார்; விளங்க முடிந்தது!

இத்தனை சிறப்புகளோடு சிறுகதை மன்னராக விளங்கினார் புதுமைப்பித்தன்; அவர் தம் நினைவு தமிழர் இலக்கிய உயர்வுக்குப் பயன் தரும் பணியாகும். தமிழ் மக்கள் நன்றி பாராட்டுபவர்கள் என்று காட்டிக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. புதுமைப்பித்தன் குடும்ப நிதிக்கு வாரி வழங்குவதன் மூலம் தங்கள் கடமையைத் தமிழ்மக்கள் சரிவரச் செய்வார்களென்று பெரிதும் எதிர்பார்க்கிறோம். நன்கொடைகளை "வை. கோவிந்தன், சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை 14" என்ற முகவரிக்கு நண்பர்கள் அனுப்பி வைப்பார்களாக.

# ...மைப்பித்தனும்

விந்தன்

புதுமைப்பித்தன் நினைவு நாள்! எங்கும் ஒரே குதூகலம்; கொண்டாட்டம்!

ஏன்? — அவர் செத்துப் போனதற்காக!

ஆம்; அவர் அமரராணுரென்றே, சிரஞ்சீவியானுரென்றே, புதுமைப்பித்தன் பாஷையில் 'பம்மாத்து' செய்ய நான் விரும்பவில்லை; அவர் செத்துத்தான் போனுர்; அதற்காகத்தான் இந்தக் கொண்டாட்டம்!

பிரசித்தி பெற்ற தமிழர்களின் பண்பாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய மாறுதல் இது.

அதாவது, மறுமலர்ச்சி!

புதுமைப்பித்தன் இலக்கியத்தில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தாரென்றுல், தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டிலே மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திருக்கிறுர்கள்!

போகட்டும்; மனிதன் உயிரோடிருக்கும்போது சந்தோஷப்படாவிட்டாலும் செத்துப் போன பிறகாவது சந்தோஷப்படுகிறுர்களே, அவர்கள் நீடூழி வாழட்டும்; அவர்களுடைய சந்தோஷம் என்றும் குன்றுமல் இருக்கட்டும்!

உலகத்தில் மனிதன் இறப்பதற்கு எத்தனையோ வழிகளைக் கையாளுகிருன். விஷம் குடிப்பது — வெந்தழலில் தீய்வது, குளத்தில் வீழ்வது — கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே குதிப்பது, தூக்குப் போட்டுக் கொள்வது—நாக்கைப் பிடுங்கிக் கொள்வது, கத்தியின் துணையை நாடுவது—காரிலோ, ரயிலிலோ மாட்டிக் கொள்வது—இப்படி எத்தனையோ வழிகள்.

புதுமைப்பித்தன் இறப்பதற்கு இந்த வழிகளையெல்லாம் கையாளவில்லை; அவர் எழுதினுர்!

ஆம், அவர் வாழ்வதற்காக எழுதவில்லை; சாவதற்காக எழுதினுர்.

எனக்குத் தெரிந்தவரை அவர் செத்துப் போனதற்குக் காரணம் இதுதான்!

ஆனுல், இரட்டைக் குழந்தைகளான எமனும் வறுமைப் பேயும் எப்பொழுதுமே பழியைத் தங்கள்மீது சுமத்திக் கொள்வதில்லை; வேறு யார்மீதாவது, எதன்மீதாவது சுமத்திவிடுவதுதான் அவர்கள் வழக்கம். இந்த வழக்கத்தை யொட்டித்தான் இன்று புதுமைப்பித்தன் இறந்ததற்குக் காரணம் புகை

யிலே என்று [illegible] சொல்கிறார்கள்.

கவி பாரதியார் இறந்ததற்குக் காரணம் கஞ்சா என்று சொல்லவில்லையா?—அந்தமாதிரி.

அட, கடவுளே!—எந்த இழவெடுத்த தொழிலைச் செய்வதாயிருந்தாலும் அதற்கென்று ஒரு தெம்பு வேண்டியிருக்கிறது. இருப்பவர்கள் 'மளமள'வென்று ஏறிக்கொண்டு வரும் 'பாங்க்' கணக்கிலும் மலைவாசத்திலும், 'கர்ஸான் கம்பெனி' கட்டிலிலும் கனி ரஸத்திலும், 'பம்பையா செண்ட்'டிலும் பாவையரின் பசலை விழிகளிலும் அந்தத் தெம்பை வரவழைத்துக் கொள்கிறார்கள். இல்லாதவன் என்ன செய்வான்? — அவன் தனக்குப் பிடித்த, தன்னால் முடிந்த, வேறு ஏதாவது ஒரு வழியில் தெம்பை வரவழைத்துக் கொள்ளப் பார்க்கிறான். அந்த வழி புதுமைப்பித்தனுக்குப் புகையிலையாயிருந்தது; பாரதியாருக்குக் கஞ்சாவாயிருந்தது.

இதுதான் விஷயம்!

சாதாரணமாக, புகையிலை ரஸிகர்கள் அதை ஏதாவது ஒரு விதத்தில்தான் உபயோகிப்பது வழக்கம். ஆனால் நம் புதுமைப்பித்தனோ இரண்டு விதங்களில் அதை உபயோகப்படுத்தினார். ஒன்று புகை; இன்னொன்று சாரம் — இரண்டும் வாய்ப்பிரயோகங்கள். மூன்றாவதான மூக்குப் பிரயோகத்தையும் அவர் கையாண்டிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். இன்னும் கொஞ்சம் முன்னாடியே அவர் [illegible]

கா[illegible]

பாழாய[illegible] விருந்தே விடுதலையடைந்திருக்கலாம். தமிழர்களும் இன்னும் கொஞ்சம் முன்னாடியே அவருக்காகச் சந்தோஷப்பட்டிருப்பார்கள்; "நினைவு நாள்" கொண்டாடி யிருப்பார்கள்!

***

இன்று நேற்றல்ல; என்றுமே எழுத்தாளன் பிழைப்பு இருந்தபோது, திண்டாட்டமாயிருந்திருக்கிறது; இல்லாதபோது கொண்டாட்டமாயிருந்திருக்கிறது.

உதாரணமாக, காலங்கடந்த கதையான அரபுக் கதையில் ஒரு கதாநாயகன் வருகிறான். பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளான பிறகு, அவன் கடைசியாக ஒரு தையற்காரனைச் சந்திக்கிறான். அந்தத் தையற்காரன், "பிழைப்பை நடத்த உனக்கு ஏதாவது தொழில் தெரியுமா, தம்பி?" என்று அவனை நோக்கிக் கேட்கிறான்.

"ஓ, தெரியுமே! — நான் பெரிய எழுத்தாளனுக்கும்! — எனக்கு வான சாஸ்திரம் தெரியும்; கணித சாஸ்திரம் தெரியும்......" என்றெல்லாம் அளக்கிறான் அவன்.

"உஸ்......" என்று அவன் வாயைப் பொத்திவிட்டு, தையற்காரன் சிரித்துக்கொண்டே ஒரு கோடரியையும் ஒரு தூண்டுக் கயிறையும் எடுக்கிறான்.

!

...யுணர்ச்சி இந்த நாட்டு மக்களிடம் கிடையாது. நீ பேசாமல் இந்தக் கோடரியை எடுத்துக்கொண்டு காட்டுக்குப் போ; விறகை வெட்டி எடுத்துக் கொண்டு நாட்டுக்கு வா! யாராவது அதை வாங்கிக் கொண்டு காசு கொடுப்பார்கள்; காலந் தள்ளலாம்!'' என்கிறான்.

இந்த உண்மை காலஞ்சென்ற புதுமைப்பித்தனுக்கும் தெரியாமலில்லை; அவரே "நமது இலக்கியம்'' என்ற நூலில் பின் வருமாறு கூறுகிறார்:

"...இப்பொழுது நமக்கு இருக்கும் கலையுணர்ச்சியைப் பற்றி எண்ணும் பொழுதெல்லாம் ஒளவைக் கிழவி ஓர் அரசனுக்குக் கொடுத்த 'சர்டிபிகேட்'தான் என்னுடைய நினைவிற்கு வருகிறது:

'இருள்தீர் மணிவிளக்
கத்தெழிலார் கோவே!
குருடேயும் அன்று
நின்குற்றம் — பொருள்சேர்
பாட்டும் சுவையும்
பயிலாதன இரண்டு
ஒட்டைச் செவியும் உள !'

'இருளை விரட்டும்படியான ரத்னாபரணங்களை வாரி அணிந்து கொண்டு சிம்மாசனத்தில் பெருமிதமாய் உட்கார்ந்திருக்கும் அழகு மிகக அரசனே! மனிதனின் அற்புதமான கனவுகளையெல்லாம் கல்லில் கொண்டிருக்கும் சிற்பங்களைப் பொருத்த மட்டில் நீ திருதராஷ்டிரன் தான்! — அந்தோ, அது மட்டுமோ? — ...ம் எழும் சப்த ... கவிதையை ...ரப்பித்தறியாத இரண்டு ஒட்டைச் செவிகளும் உண்டு, உனக்கு!' என்று இரங்குகிறாள்.

அந்த எழிலார் பெருமானின் வம்ச வளர்ச்சியோ தமிழ்நாடு என்று சொல்லும்படி இருக்கிறது நமது கலையுணர்ச்சி...!''

இவ்வாறு கூறியிருப்பவர் என் கதை எழுதினார், கட்டுரை எழுதினார், கவிதை எழுதினாரென்றால் அதுதான் எழுத்தாளனின் குறும்பு; கிறுக்கு; பைத்தியம்!

உலகத்தில் தொன்றுதொட்டு இருந்து வரும் கொடுமைகளையும் கொடூரங்களையும், அநீதிகளையும் அக்கிரமங்களையும், விசித்திரங்களையும் விநோதங்களையும் முதன்முறையாகப் பார்த்த போது புத்தர் பெருமானுக்கு ஞானப் பைத்தியம் பிடித்தது; போதி மரத்தை நாடினார். புதுமைப்பித்தனுக்கோ எழுத்துப் பைத்தியம் பிடித்தது; பத்திரிகைத் தொழிலைத் தேடினார்.

புத்தருக்குச் செல்வம் இருந்தது; புதுமைப்பித்தனுக்கு அந்தக் கலம் பூஜ்யம்.

புத்தர் வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு வெருண்டு ஓடினார்; புதுமைப்பித்தன் அவற்றை எதிர்த்து நின்று போராடினார்.

இரண்டும் பைத்தியங்கள் தான் என்றாலும் எழுத்துப் பைத்தியம் ஒரு தனி ரகம்.

உங்களுக்குக் கதை தெரியுமா?— எழுத்தாளர் ஒருவர்

பைத்தியக்கார...
இருந்தார். அவ...
டரை நோக்கி, "தயவுசெ...
எனக்குப் பேனவும் காகிதமும் கொடுங்கள்; கதை எழுத வேண்டும்" என்றார்.

டாக்டருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை; மனுஷனுக்குப் பைத்தியம் தெளிந்துவிட்டது என்று கருதி, உடனே அந்த எழுத்தாளருக்கு அவர் பேனவும் காகிதமும் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். எழுத்தாளர் அவற்றை வாங்கி ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு எழுதத் தொடங்கினார். எழுதி முடித்ததும் அதை டாக்டரிடம் கொடுத்துவிட்டு, அவரை ஒரு 'ராஜ பார்வை' பார்த்தார். டாக்டர் அதை ஆவலுடன் வாங்கிப் படிக்க ஆரம்பித்தார்:

"ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரு நாள் அடுத்த ஊரிலிருக்கும் தன் ராணியைப் பார்க்க வேண்டுமென்று ஆசை வந்துவிட்டது. உடனே தன்னை அழகாக அலங்கரித்துக்கொண்டு அவர் அரண்மனையை விட்டு வெளியே வந்தார். மந்திரியிடம் "கொண்டு வா, குதிரையை!" என்றார். குதிரை வந்து நின்றது; ஒரே தாவாகத் தாவி அதன்மீது ஏறினார். லகானை மிடுக்குடன் இழுத்துப் பிடித்து, "ஹைஹை என்று அதட்டினார்...ஹைஹை என்று அதட்டினார்...ஹைஹை என்று அதட்டினார்...ஹைஹை என்று அதட்டினார்...ஹைஹை என்று அதட்டினார்......!"

...
...னர்... ...பக்கமாகப் போய்க்கொண்டிருந்தது. டாக்டருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் 'திருதிரு' வென்று விழித்துக்கொண்டே, "என்ன ஸார், இது! கதை மேலே போகவேயில்லையே?" என்றார்.

"நான் என்ன செய்யட்டும், ஸார்! குதிரை என்ன அதட்டியும் மேலே போகவில்லை; 'மக்கர்' செய்துவிட்டது. அப்புறம் கதை எப்படி மேலே போகும்?" என்றார் அந்த எழுத்தாளர் பைத்தியம்.

இந்தக் கதையை இங்கே எதற்காகச் சொல்கிறேனென்றால், பைத்தியம் பிடித்த நிலையிலும் அந்த எழுத்தாளரின் மேதையும் கற்பனையும் எப்படி வேலை செய்திருக்கிறதென்று பாருங்கள் என்பதற்காகத்தான்!

ஏறக்குறைய இம்மாதிரிப் பைத்தியந்தான் நம் புதுமைப் பித்தனையும் பிடித்திருந்தது. அதனால் அவர் தம்மை மறந்து, தம் மனைவி மக்களை மறந்து ஆத்திரத்தோடு எழுதினார்; ஆவேசத்தோடு எழுதினார்; அடிவயிற்றைக் கையால் அழுத்திப் பிடித்துக்கொண்டு எழுதினார்; ஆயாசத்தால் ஆகாயத்தில் பறந்துகொண்டு எழுதினார்!

**"உள்ளத்தில் ஒளி உண்டானல்**
**வாக்கினிலே ஒளி உண்டாகும்"**

என்றார் பாரதியார். அந்த ஒளி புதுமைப்பித்தனின் உள்ளத்தில்

அவர் வாழ்ந்
ான புகையிலை
ல அவர் செத்
ன் தாலைநார்!

...னால் அவ...றைத் தக்கபடி அனுபவிக்க, அவற்றை எழுதிய மேதையைத் தக்கபடி உபசரிக்க, தமிழர்களின் உள்ளத்தில் அப்போது ஒளி உதயமாகவில்லை.

இந்த நிலையில் அவர் என்ன எழுதி என்ன பயன்?—உண்மையான கலையுணர்ச்சியற்ற தமிழர்கள் அவருடைய கதைகளைப் படித்துவிட்டுக் கற்சிலைகள் போல் இருந்துவிட்டார்கள்; நண்பர்களோ, "உங்கள் கதைகளைப் படித்தோம்; ரொம்ப ரொம்பப் பிரமாதம், போங்கள்!" என்று பாராட்டுவதோடு நின்றுவிட்டார்கள்.

காசுக்கு வழியில்லை; கிடைத்த கொஞ்சநஞ்சம் காசும் அவருடைய 'பைத்தியக்கார வாழ்க்கை'க்குப் போதவில்லை.

எல்லோருக்கும் ஒருவிதப் பசி என்றால், புதுமைப்பித்தனுக்கு இரண்டுவிதப் பசி. ஒன்று வயிற்றுப் பசி; இன்னொன்று இலக்கியப் பசி! — இந்த நிலையில் உணர்ச்சி அவரை மேலும் மேலும் எழுத உந்தித் தள்ளிற்று. அதற்கு ஓரளவாவது தெம்பு வேண்டாமா? அந்தத் தெம்பை அவர் உபயோகித்து வந்த புகையிலைதான் அவருக்கு மனமுவந்து அளித்தது.

அந்த மகத்தான புகையிலையின் ஆதரவிலே அவர் எழுதி...ர்; அந்த மகத்தான புகையிலை

இதுதான் தோழர் புதுமைப்பித்தனின் கதை.

"செட்டும் சிக்கனமுமாக இருந்திருந்தால் புதுமைப்பித்தன் தமக்குக் கிடைத்த வருமானத்திலேயே சௌகரியமாக வாழ்ந்திருக்கலாம்" என்று சிலர் சொல்கிறார்கள். உண்மை; அப்படி வாழ்ந்திருந்தால் அவர் ரூபாய்க்கும் ரூபாய்க்கும் கல்யாணம் செய்துவைத்து, ரூபாய்க்கும் ரூபாய்க்கும் ரூபாயாகவே பிள்ளை பெற வைக்கும் வட்டிக் கடை முதலாளியாக ஆகியிருப்பார்; ஓரணாச் சரக்கை, ஒரு ரூபாய் விலையுள்ள சரக்காக மாற்றும் 'மாஜிக்' வியாபாரியாக மாறியிருப்பார்; வாழ்க்கை வளத்தைவிடப் பணத்தின் வளத்தையே பிரதானமாகக் கருதி, சோம்பேறித்தனத்தைத் தங்கள் வம்ச பரம்பரைச் சொத்தாக விட்டுச் செல்லும் சதிகாரர்களின் கூட்டத்திலே அவரும் சேர்ந்திருப்பார்! — எதிலும் மனத்தை எளிதில் பறிகொடுத்துவிடும் ஏமாளியாகவோ, எழுத்து வாழ்வதற்காகத் தன் வாழ்க்கையையே தத்தம் செய்துவிடும் எழுத்தாளனாகவோ, பணத்தை வெறும் விளையாட்டுக் கருவியாக மதிக்கும் பச்சிளங்குழந்தையாகவோ அவர் ஒரு நாளும் ஆகியிருக்க மாட்டார்!

புதுமை எ

அது முதல்

காமற் போவது

இயல்பை யொட்டிச

புதுமைப்பித்தனின் கதை பிடித்தது; கருத்து பிடித்தது; நடை பிடிக்கவில்லை.

புதுமைப்பித்தன் தம்முடைய நடையைப்பற்றித் தாமே கூறுகிறார், கேளுங்கள் :

"...கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு, தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது நானாக எனக்கு வகுத்துக்கொண்ட ஒரு பாதை. அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது; அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதின் விளைவாகப் பாஷைக்குப் புதிது. இதனால், பலர் நான் என்ன எழுதுகிறேன் என்பதை பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொதுஜனங்களுக்குப் 'புரியாது' என்று சொல்லி அனுதாபபட்டார்கள். அந்த முறை நல்லதா, கருத்து ஓட்டத்திற்கு வசதி செய்வதா என்பதை அதே முறையில் பலர் எழுதிய பின்புதான் முடிவு கட்ட முடியும். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கைவிட்டுவிட்டேன். காரணம், அது சௌகரியக் குறைவுள்ள சாதனம் என்பதற்காக அல்ல; பல முறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் அதைக்

த்

தின சோ ...போல, லக்கிய வளர்ச்சியின் தேருவடச்சான் சந்துகளாக அங்கேயே வளர்ச்சித் தன்மை மாறி நின்றுவிட்டன. இன்று அவற்றை ஆற அமரப் படித்துப் பார்த்துத்தான் முடிவு கட்டவேண்டும். எனது முயற்சி பலிக்காமல் போயிருக்கலாம்; அதனால் முறை தப்பானது என்று முடிவு கட்டிவிடக் கூடாது...!"

இவ்வாறு தம்மைப் பற்றியும் சரி—பிறரைப் பற்றியும் சரி, எதையும் அழுத்தந் திருத்தமாக அஞ்சாநெஞ்சத்துடன் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்த நண்பர் புதுமைப்பித்தன், இன்று தமிழர்களிடம் நிதி கோரித் தம் மனைவி மக்களைக் கெஞ்சாது கெஞ்ச வைத்திருக்கிறார். இந்த அவல நிலை உடனே மாறவேண்டும். அதற்குத் தமிழ்ப்பெரு மக்கள் இனியாவது ஒரு விதி செய்யவேண்டும்.

"என்ன விதி?" என்று கேட்கிறீர்களா? — இதோ சொல்கிறேன் :

பணக்காரர்களுக்கு எழுத்தைப் பற்றியும் கவலை கிடையாது; எழுத்தாளர்களைப் பற்றியும் கவலை கிடையாது. அவர்கள் எப்பொழுதுமே மனித இனத்திலிருந்து வேறுபட்டிருப்பவர்கள். இதயமில்லாமல் இயங்கக்கூடிய அபூர்வ சக்தியை அவர்கள் அவமதிக்கும் ஆண்டவன் அவர்களுக்கு அளித்திருக்கிறார். அத்

டப் போகிறார்
ளுக்காக எழுத்
கவலைப்பட

சொ
செய்
அவர்
க... து ...ணத்
தோடு பிறக்கிற...கள்; வளரும் போது பணத்தோடு வளர்கிறார்கள்; வாழும்போது பணத்தோடு வாழ்கிறார்கள்; சாகும்போதும் பணத்தோடு சாகிறார்கள்.

அறிவின் துணைகொண்டு பெருமை தேடிக்கொள்ள வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை. அந்தப் பெருமையைப் பிருந்தாவனம் போன்ற மாடமாளிகையும், நடைமுறை வருஷத்து 'மாடல்' காரும் அவர்களுக்குச் சுலபமாக அளித்து விடுகின்றன.

இன்னும் அவர்களைப் 'புண்ணியவான்கள்' என்று சொல்லச் சில 'பாவிகள்' இருக்கிறார்கள்; 'புத்திசாலிகள்' என்று சொல்லச் சில 'மடையர்கள்' இருக்கிறார்கள்.

பணத்தைப் பாதுகாக்கப் 'பாங்க்' இருக்கிறது; உயிரைப் பாதுகாக்க டாக்டர்களோடு போலீஸாரும் இருக்கின்றனர்.

ஆகவே, எந்தவிதமான விசாரமுமின்றி அவர்கள் நிச்சிந்தையாக இருக்கிறார்கள்.

ஏழைகளோ, பணக்காரர்களுக்காக எப்பொழுதுமே தியாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பவர்கள். தங்களைப்பற்றியே அவ்வளவாகக் கவலைப்படாத அவர்கள், எழுத்தாளர்களைப் பற்றி

இந்த இரு சாராருக்குமிடையே இருப்பவர்கள் யார் தெரியுமா?—மத்தியதர வகுப்பாராகிய நீங்கள்தான்!—உலகத்தில் நடக்கும் எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக் கொள்வது போல, நீங்கள் எழுத்தாளர்களை உயிரோடு வாழ வைப்பதற்கும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். போலி நாகரிகத்துக்காகவும் பொழுது போக்குக்காகவும் போட்டிப் பந்தயங்களுக்காகவும் நீங்கள் செலவழிக்கும் பணத்தில் ஒரு பகுதியை நல்ல புத்தகங்கள் வாங்குவதில் செலவழிக்க வேண்டும். கூடியவரை இரவல் புத்தகம் வாங்கிப் படிக்கும் வழக்கத்தை நிறுத்தவேண்டும். புத்தகத்தின் சொந்தக்காரர்களும் இரவல் கொடுக்கும் வழக்கத்தை ஓரளவு குறைத்துக்கொள்ள வேண்டும்.

முடியுமானால் பஸ் பிரயாணிகள் சங்கம், சினிமா ரஸிகர்கள் சங்கம் என்பவை போல நீங்கள் வட்டத்துக்கு ஓர் "இலக்கிய ரஸிகர்கள் சங்கம்" அமைத்து, "வீட்டுக்கு ஒரு புத்தகசாலை" என்னும் இயக்கத்துக்குத் திட்டம் வகுக்க வேண்டும்.

அத்துடன் இலக்கிய ரஸனையுள்ள நீங்கள், உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இலக்கிய ருசியை ஊட்ட முயற்சி

செய்யவேண்டு
முயற்சி செய்தா
வாழ்க்கை பே ம்
பெறும்; போலி நாகரிகத்தி
லுள்ள மோகமும் போட்டிப் பந்தயங்களிலுள்ள வேகமும் படிப்படியாகக் குறையும்.

ஒரு நாட்டின் நாகரிகத்தை அளவிடுவதற்கு அதனுடைய இலக்கிய வளர்ச்சிதான் அடிப்படையாயிருக்கிறது. அது மட்டுமல்ல; மிருகத்தன்மையுள்ள மனிதனை மனிதத்தன்மையுள்ள மனிதனாக மாற்றக்கூடிய சக்தி இலக்கியத்துக்குத்தான் இருக்கிறது. அப்படி மாற்றினால் உங்களுக்கும் க்ஷேமம்; எழுத்தாளர்களாகிய எங்களுக்கும் க்ஷேமம்.

அந்த நிலை வந்த பிறகு, எத்தனை பாரதிகள் பிறந்தாலும் அவர்களைக் கஞ்சாவால் கொல்ல முடியாது; எத்தனை புதுமைப் பித்தன்கள் பிறந்தாலும் அவர்களைப் புகையிலையால் கொல்ல முடியாது.

மு
வி த
ஆரம்பச்சக று
வரை இறுதி டுச சொல்லவில்லை. ஏன், நம்முடைய அனுபவ ஞானம்கூட அதற்கு நேர் விரோதமாய்த்தான் இருந்து வருகிறது.

எனவே, நீங்கள் கஞ்சாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; புகையிலையைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். மேலே கூறிய இலக்கிய உணர்ச்சியை மட்டும் நீங்கள் உங்களிடையே வளர்த்துக்கொண்டால் போதும்; உங்கள் எழுத்தாளர்கள் சாட்சாத் ஸ்டாலினைப் போலவும் வின்ஸ்டன் சர்ச்சிலைப் போலவும் பண்டித நேருவைப் போலவும் டாக்டர் சுப்பராயனைப்போலவும் ஓயாமல் புகைபிடித்தாலும் நெடுநாட்கள் உயிரோடிருந்து தமிழை வளப்படுத்துவார்கள்; தமிழ் நாட்டை மேம்படுத்துவார்கள்.

இதில் சந்தேகமே யில்லை!

---


விந்தன் எழுதிய

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலும் பாவையும் | (நாவல்) | ... | 3 | 8 | 0 |
| முல்லைக்கொடியாள் | (சிறுகதைகள்) | ... | 3 | 0 | 0 |
| ஒரே உரிமை | (சிறுகதைகள்) | ... | 2 | 8 | 0 |
| வேலை நிறுத்தம் ஏன்? | (அரசியல்) | ... | 0 | 12 | 0 |

**ஸ்டார் பிரசுரம்**

திருவல்லிக்கேணி :: சென்னை – 5

# … உங்கள் வாக்கு?

தேர்தல் வருகிறது. கட்சிகள் கச்சைகட்டுகின்றன. தனிப்பட்ட நபர்கள் 'எந்தக்கட்சி நல்லது?' என்று இடந்தேடும் படலத்தில் இறங்கியிருக்கிறார்கள். கட்சிகளோ, எவரெவரை எங்கெங்கே நிறுத்தினால் கட்சி வெல்லும் என்று ஆராய்ச்சி நடத்துகின்றன. அரசாங்கமோ தேர்தல் வெள்ளோட்டம் நடத்திப் பார்க்கிறது. யாரா ருக்கு எந்தெந்த அடையாளங்கள் வழங்கலாமென்று தீர்மானிக்கக் கட்சிகளின் மாநாடு நடைபெறப் போகிறது! இத்தனை ஆரவாரங்களுக்கும் காரணமாக விளங்கும் தேர்தல் இன்னும் ஆறு மாதம் கழித்து நடக்கப்போகிறது. அப்படி நடைபெறும் தேர்தலில் பொதுமக்கள் மிகவிழிப்பாக இருக்கவேண்டும். தங்கள் வாக்குகளைச் சரியான கட்சிகளுக்கே அல்லது சரியான ஆட்களுக்கே வழங்கவேண்டும். இந்தவிழிப்புணர்ச்சியை நாட்டில் வளர்ப்பதற்காகவே இப்பகுதி தொடங்கப்படுகிறது. நண்பர்கள்எல்லோரும் தத்தம் கருத்தை இப்பகுதிக்கு எழுதியனுப்பலாம். ஒரு 'கார்டு' அளவுக்குள் உங்கள் கருத்துரை அடங்கியிருக்கவேண்டும். உங்கள் கருத்துரையில், உங்கள் வாக்கை யாருக்கு அளிப்பீர்கள் என்ற குறிப்பும், அவர் நாட்டுக்கு என்ன செய்யவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்ற விளக்கமும் இருக்கவேண்டும். கட்சியைப் பற்றிக் கூறுவதானால் அந்தக் கட்சியின் லட்சியங்களை உங்கள் கருத்துரை விளக்கலாம். கட்சிகளின் தேர்தல் திட்டங்களிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டலாம் - ஆலோசனைகள் கூறலாம். அரசினருக்குத் தேர்தலை நடத்தும் விதம்பற்றிச் சில திட்டங்களை எடுத்துரைக்கலாம். தேர்தலுக்கு நிற்க விரும்பும் தனிப்பட்டவர்களுக்கு உங்கள் 'உபதேசங்களை' வழங்கலாம். தேர்தலைப் பற்றியதாக உங்கள் கடிதம் அமையவேண்டுமென்பதே முக்கியம். எல்லாக்கட்சித் தோழர்களும் இப்பகுதியில் கலந்துகொள்ள வேண்டுமென்பதே எங்கள் ஆசை. நண்பர்கள் தங்கள் தங்கள் மாற்றுக்கட்சித் தோழர்களையும் கருத்துரை அனுப்பச் செய்வார்களென எதிர்பார்க்கிறோம். எழுத்துவன்மையில் சிறந்த கருத்துரைக்கு ஒவ்வொரு இதழிலும் ரூபாய் மூன்று பரிசளிக்கப்படும்.

# அன் [illegible]

கோமேதகவேலு

**லா** மாகரேனு ஸ்பெயின் தேசத்தில் உள்ள செவில் பட்டினத்தில் ஒரு சிறு பாகம்! அதுதான் அந்தப்பட்டினத்திலேயே மிகவும் அழுக்கடைந்த பாகம். தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதி வேறு எப்படி இருக்கும்? அந்தப் பாகத்தில் ஒரு பெரிய பழைய கட்டிடம் இருந்தது. அந்தக் கட்டிடத்தில் ஒண்டுக்குடித்தனமாகப் பல தொழிலாளிகள் வசித்து வந்தனர்.

●

ஒரு நாள் காலை! அந்தக் கட்டிடத்தில் காலியாய்க் கிடந்த ஒரு அறைக்கு ஒரு பெண் குடிவந்தாள். அவளுக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். அவள் பார்ப்பதற்கு முரட்டு சுபாவமுள்ளவள்போல் தோன்றினாள். அவள் அந்த வீட்டிற்கு வரும்பொழுதே சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்த வண்டிக்காரனுடன் கூலி விஷயமாகச் சண்டை போட்டுக்கொண்டுதான் வந்தாள். குடியேறிய முதல் நாளைக்கே, அந்த வீட்டிலுள்ள வேறு பெண்களின் கவனத்திற்கு வந்துவிட்டாள் அவள்.

அவள் பெயர் விசட்டு. அவள் எப்பொழுதும் தன் அறையின் கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு பொழு [illegible] வெளி [illegible] ளுக இ [illegible] ன் திரும்புவாள். வந்ததிலிருந்து அவள் யாருடனும் பழகுவது கிடையாது. அவளிடம் மற்ற பெண்கள் வந்து பேசினாலும் முகத்தைத் திருப்பிக்கொண்டே போய்விடுவாள். மற்றவர்கள் தன்னிடம் நெருங்கிப் பழகக் கூடாது என்பதற்காகவே, எப்பொழுதும் தன் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டிருந்தாளோ என்னவோ!

அந்த வீட்டில் குடியிருந்த ஆண்கள் எல்லோரும் தொழிலாளர்கள். அவர்கள் காலையில் வேலைக்குச் சென்றால் விளக்கு வைத்த பிறகுதான் வீடு திரும்புவார்கள். அதுவரைக்கும் அந்தக் கட்டிடத்தில் இருக்கும் பெண்களுக்குப் புதியவளைப்பற்றிக் 'கமிட்டி' பேசுவதைத் தவிர வேறு உருப்படியான வேலைகள் எதுவும் இருக்காது.

"அவள் யார்? அவள் எங்கிருந்து வந்திருக்கிறாள்? அவளுடைய பழைய சரித்திரம் என்ன?" என்பவைகளை அறிந்துகொள்ள அந்தப் பெண்கள் மிகவும் ஆவல் காட்டினார்கள்.

ஒருநாள் அந்தக் கட்டிடத்திற்குப் போலீஸ் அதிகாரி ஒருவன வந்தான். விசட்டைப்பற்றி அவர்களிடம் விசாரித்தான். அவ்வளவுதான்! "என்ன, என்ன" என்று ஒவ்வொருவரும் விழுந்தடித்துக்கொண்டு வந்தார்கள்,

விசட்டு ... ன்ற தற்காகச் ... ண்டனை பெற்றவனெ ... சிறையி லிருந்து விடுதலையாக ... ருமாதம் தான் ஆகிறதென்றும், அவ ளுடைய ஒழுக்கத்தைப்பற்றி விசாரித்துப் போகவே தான் வந்ததாகவும் அவன் சொல்லி விட்டுப் போனன்!

"அடி, பாவி!" என்று எல் லோரும் ஏக மனதாக வாய்விட் டுக் கூறினர்கள்.

"ஜெயிலுக்குப் பூட்டு வந்த மூதியா! அதான் மூஞ்சியைப் பாத்தாப் பிசாசுமாதிரி இருக்கு" என்று ஆத்திரத்தைக் கொட்டி ணுள் ஒருத்தி.

"புருஷனையே கொன்னுட்டா ளாமே!"

"அவன் இவளை உதைச்சிருப் பான்."

"இல்லை, இல்லை. கள்ளப் புரு ஷனுக்காக விஷம் கொடுத்திருப் பாள்.."

வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல விசட்டைப் பற்றிய செய்தி, அந்தப் பெண் களின் வம்பளப்பிற்கு 'ருசிகர மாக' அமைந்தது. ஆனல் இந் தக் கூட்டத்திலெல்லாம் சேரா மல் ஒதுங்கியிருந்தாள் பிலார்.

பிலார் ஒரு விதவை! அவ ளுக்கு ரோசாலியா என்று ஒரு மகள் இருந்தாள். அவள் நல்ல அழகி. இன்னும் கல்யாணம் ஆகவில்லை. மற்றப் பெண்களைப் போலல்லாமல் பிலாரும் ரோசா லியாவும் விசட்டின் போக்கைக் கொஞ்சம் அனுதாபத்துடன் கவனித்து வந்தார்கள்.

...யிற்றுக்கிழமை மாலை! ... பட்டினத்து வீதி களில் ஜனக்கூட்டம் அதிகமா யிருந்தது. மற்ற ஸ்பெயின் தேசத்துக் கட்டழகிகளைப்போல ரோசாலியாவும் தன்னை நன்ருக அலங்கரித்துக்கொண்டு, அந்தக் கட்டிடத்தின் வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாள். அவள் பார்ப்பதற்கு மலர்ந்து குலுங் கும் மலர்க்கொடிபோல் தோற்ற மளித்தாள்.

"இங்கே 'விசட்டு' என்று யாராவது இருக்கிறர்களா?" என்ற குரலைக் கேட்டு அவள் திடுக்கிட்டுப் போனுள். அவள் எதிரே ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

"ஆமாம். அதோ, அந்த அறையில்!" என்று தட்டுத் தடு மாறிக்கொண்டு விசட்டு வசித்து வந்த அறையைக் காட்டினுள். அந்த இளைஞன்ரோசாலியாவுக்கு 'நன்றி' சொல்லிவிட்டு அவள் காட்டிய அறையை நோக்கி நடந்தான். உடனே ரோசா லியா தனது தாயிடம் சென்று இந்தப் புது விஷயத்தை எடுத் துரைத்தாள்.

"அம்மா, அந்த விசட்டைத் தேடி யாரோ ஒரு புது ஆள் வந் திருக்கிறன். அவன் பார்ப் பதற்கு மிகவும் அழகாயிருக்கின் ருன்" என்று மிகவும் ஆதுரத் துடன் கூறினுள். பிறகு தாயும் மகளும் அந்த அறையைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார் கள்.

அந்த இளை... ...வைத் தட்டினான். ... திறந்தது. "கியூரிடோ, வந்துவிட்டாயா!" என்று அன்புடன் கூப்பிட்டுக் கொண்டே அவனை அணைத்துக் கொண்டாள் விசட்டு. அவள் கண்களிலே புதிய ஒளி வீசியது. அந்த இளைஞனின் தலையைக் கோதிவிட்டுக்கொண்டே விசட்டு, அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

ரோசாலியா இந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். "அந்த இளைஞன் அவளுடைய மகன் என்று நினைக்கிறேன்" என்று தன் தாயிடம் கூறினாள். அவள் குரலிலே ஏதோ 'ஒருவித' நம்பிக்கை இருந்தது. அந்த இளைஞனின் அழகிய உருவத்தை அவளால் மறக்க முடியவில்லை.

சிறிதுநேரம் கழித்து அந்த இளைஞன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். ரோசாலியா அந்தக் கட்டிடத்தின் மாடியிலுள்ள தாழ்வாரத்தில் அவனுடைய பார்வைக்குத் தெரியும்படியாக நின்றுகொண்டிருந்தாள். இருவரும் புன்னகை செய்துகொண்டார்கள். இதை விசட்டு பார்த்துவிட்டாள். அவ்வளவுதான்! 'விடுவிடென்று' அவனை வாசற்படி வரைக்கும் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பிவந்தாள். அப்போது பிலார் அவளைப் பார்த்து "அது உன் மகனா?" என்று மெதுவாகக் கேட்டாள்.

... போலத் தன... ...நிறைந்த முகத்... ...க்கொண்டே "ஆமாம்" ...று கூறிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்துகொண்டாள். ரோசாலியா தன் தாயை அர்த்தத்தோடு பார்த்தாள்!

●

கியூரிடோ விசட்டுவின் ஒரே மகன்! அன்பு, காதல், ஆசை, பாசம் அனைத்தையும் கியூரிடோவின் மேல் கொட்டிவைத்திருந்தாள் அவள்! தன்மீது கடுகத்தனை அளவு அன்பு குறைந்தது போல் தோன்றினாலும் விசட்டு



அதைப் பிரமாதமாக எண்ணிக் கொள்வாள்! எனவேதான் தன்னெதிரே தன் மகனுடன் யாரும் சிரித்துப் பேசுவதை அவள் அனுமதிப்பது கிடையாது. ரோசாலியா கியூரிடோவைப் பார்த்துப் புன்னகை செய்ததும் அவன் ரோசாலியாவைப் பார்த்துப் புன்னகை செய்ததும் அவளுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவேயில்லை.

கியூரிடோ பக்கத்திலுள்ள வேறொரு பட்டினத்தில் வேலை பார்த்து வந்தான். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் தன் தாயைப் [illegible]க வந்துவிட்டுப் போவது வழக்கம்!

●

மறு ஞாயிற்றுக்கிழமை வந்தது. தன் மகன் நிச்சயம் வருவான் என்று விசட்டுக்குத் தெரியும். அன்று முன்னெச்சரிக்கையாகவே அந்தக் கட்டிடத்தின் வாசற்படியில் போய் நின்று கொண்டாள். இதைக் கண்ட ரோசாலியாவுக்கு என்னவோ போல் இருந்தது. இருந்தாலும் விசட்டுவின் போக்கில் குறுக்கிடும் அளவுக்கு அவளிடம் துணிச்சல் இல்லை.



கியூரிடோ வந்தான். அவன் கண்கள் சுற்றுமுற்றும் மருண்டு நோக்கின. அவனுடைய பார்வையின் அர்த்தம் விசட்டுக்குத் தெரியாதா? “எங்கேடா பார்க்கிறாய்? இப்படி வா!” என்று தன் அறைக்கு அழைத்துச் சென்றாள். அவன் திரும்பச் செல்லும்பொழுது இந்தக் கதைதான் நடந்தது. அன்று ரோசாலியாவால் அவனைப் பார்க்கவே முடியவில்லை. ‘இப்படியும் ஒரு தாய் இருப்பாளா?’ என்று அவள் மனம் எண்ணியது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை வந்தது. வழக்கம்போல விசட்டு

வாசலில் போய் [illegible] கொண்டாள். ஆனல் ரோசாலியா ஏமாந்துவிடவில்லை. கியூரிடோ எந்த வழியாக வருவான் என்பது அவளுக்குத் தெரியும். வழியிலேயே அவனைச் சந்தித்துவிடலாம் என்று கருதித் தன்னை நன்ருக அழகு செய்துகொண்டு கிளம்பிவிட்டாள். அவள் எதிர் பார்த்தபடி அவனும் வந்துகொண்டிருந்தான். ரோசாலியாவைப் பார்த்ததும் அவன் எல்லையற்ற மகிழ்ச்சிப் பெருக்கில் தன்னை மறந்தவனுய், "வணக்கம், ரோசாலியா" என்று கூவினன். "மெதுவாகச் சொல்லு. உன் அம்மாவின் காதில் விழப்போகிறது!" என்று சிரித்துக் கொண்டே கூறினள் ரோசாலியா! அவன் முகம் லேசாக மாறியது. "என் அன்னைக்குத் தவிர வேறு யாருக்கும் நான் பயப்படுவதில்லை. அவள் என் மீது மிகவும் அன்பாயிருக்கிருள்" என்ருன்.

பிறகு இருவருக்கும் அடுத்து என்ன பேசுவதென்றே தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார்கள். வீதியில் செல்வோரெல்லாம் இவர்களை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டே சென்ருர்கள்.

"ஆமாம்! இப்பொழுது எங்கே போகிருய்?" என்ருன் கியூரிடோ!

"அதெல்லாம் உனக்கு ஏன்? உன்னுடைய தாய் வாசற்படியில் நின்றுகொண்டிருக்கிருள். இங்கே நாம் இருவரும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், நிச்சயம் உன்னை உதைக்காமல் விடமாட்டாள்" என்ருள் ரோசாலியா!

இருவரும் சிரித்துக்கொண்டார்கள். பிறகு கியூரிடோ அவளுக்கு வணக்கம் சொல்லிவிட்டுப் போனன்.

அவன் போன சிறிது நேரத்திற்கெல்லாம் ரோசாலியாவும் திரும்பத் தன் வீட்டுக்கு வந்து மெத்தைத் தாழ்வாரத்தில் நின்றுகொண்டாள். கியூரிடோ திரும்பிச் செல்லும்போது தாழ்வாரத்தில் அவளைப் பார்த்துவிட்டான். தான் போய் வருவதாகச் 'சைகை' காட்டினன். அவளும் அன்புடன் தன் கைகளை ஆட்டினள். இதைப் பார்த்த விசட்டுக்குப் 'பகீர்' என்றது. வாசற்படிக்கு வந்ததும் "அந்தச் சிறுக்கியோடு உனக்கென்னடா பேச்சு!" என்று கடிந்துகொண்டாள். அவன் ஒரு பதிலும் பேசாமல் போய்விட்டான்.

●

மீண்டும் ஞாயிற்றுக்கிழமை வந்தது. அன்று செவில் பட்டினத்தில் திருவிழா! ஆண்களும் பெண்களுமாக அந்தப் பட்டினமே 'ஜில்'லென்று காட்சியளித்தது. அந்தக் கட்டிடத்தில் வசித்த மக்களெல்லாம் தங்கள் அறைகளை வர்ணக் காகிதங்களைக் கொண்டு அலங்கரித்தார்கள். கட்டிடத்தின் முன்னல் சிறுமேடை ஒன்று அமைத்தார்கள். அன்று மாலை ரோசாலியா நடனமாடுவதாக இருந்தாள்.

மாலை வந்தது. விசட்டு மட்டும் தன் அறையின் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு உள்ளேயே கிடந்தாள். வழக்கம் போலக் கியூரிடோ வந்தான். இருவரும் உள்ளே பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது வாத்திய ஒலிகளும் ஆரவார ஓசைகளும் கேட்கவே ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான் கியூரிடோ. அங்கே ரோசாலியா மேடைமீது நடனமாடிக் கொண்டிருந்தாள்.

அவன் ஜன்னல் வழியாக அவளுடைய நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் வந்து நின்ற விசட்டு "அந்தக் குரூபியின் நடனத்தைப் பார்க்கவும் வேணுமா? சகிக்கவில்லை!" என்றாள். கியூரிடோ அவளுடைய விமர்சனத்தைக் காதில் போட்டுக் கொள்ளாமல் வெளியே வந்து மற்றவர்களுடன் சேர்ந்து நின்று கொண்டான்.

ரோசாலியா கியூரிடோவைப் பார்த்ததும் அவள் நடனத்திலே புது விறுவிறுப்புத் தோன்றியது. அவளது நாட்டியம் மிகவும் அருமையாக அமைந்ததால் எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். கியூரிடோ அவளை ஒரேயடியாகப் புகழ்ந்தான்.

"கியூரிடோ, உனக்கு நடனமாடத் தெரியுமா? என்னுடன் சேர்ந்து நடனமாடுகிறாயா?" என்று கேட்டாள்.

அவனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது. "சரி" என்றான். இருவரும் சேர்ந்து நடனமாடத் தொடங்கினர். கரகோஷமும் ஆரவாரமும் அந்தக் கட்டிடமே இடிந்து விழும்படியாய் இருந்தன. "அழகான ஜோடி—அருமையான நடனம்" என்று எல்லோரும் பாராட்டினர்.

இந்தத் திருக்கூத்தை ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த விசட்டுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "அட மகனே!" என்று தலையிலடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள். நடனம் முடிந்தபிறகு கியூரிடோ தாயின் அறைக்குத் திரும்பி வந்தான். கதவு பூட்டியிருந்தது. வெகு நேரம் வரை தட்டித் தட்டிப் பார்த்தான்! கதவு திறக்கப்படவே இல்லை.

•

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு கியூரிடோ தன் தாயிடம் வருவதை நிறுத்திவிட்டான். ஆனால் தினமும் மாலையில் ரோசாலியாவை ஒரு பூங்காவில் சந்தித்து வந்தான். இருவரும் ஏதாவது பேசிக்கொண்டே இருப்பார்கள். அல்லது மௌனமாக இருந்து விட்டுப் போவார்கள்.

ரோசாலியாவும் கியூரிடோவும் பூங்காவிலே சந்தித்துப் பேசுவது விசட்டுக்குத் தெரிந்துவிட்டது. தன் மகன் ரோசாலியாவுடன் சேருவதை அவள் கொஞ்சம் கூட விரும்பவில்லை. தன் அன்புப் பிடியிலிருந்து அவன் நழுவிக் கொண்டிருக்கிறான் என்பது மட்டும் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. இதற்கெல்லாம்

வீடும் விளக்கும்
சுகி எழுதியது
வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் சுவைபடச் சித்தரிக்கப்பட்டுள்ளன.
இரு நிற அட்டை. 66 பக்கங்கள்.
விலை அணா 8
பொன்னி — சென்னை-21.

யார் காரணம்? எல்லாம் அந்தச் சூனியக்காரி ரோசாலியாதான்! அவள் மனம் கொதித்தது!

விசட்டு ஒருநாள் தன் மகனைப் போய்ப் பார்த்தாள்!

"கியூரிடோ, நீ ஏன் இப்பொழுது வீட்டுக்கு வருவதில்லை? உன்னைத் தவிர எனக்கு ஆதரவு காட்ட யார் இருக்கிறார்கள்? உன்மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறேன் என்பது தெரிந்தால் இப்படி நீ அலட்சியம் செய்யமாட்டாய். உடனே வீட்டுக்கு வா" என்று கேட்டுக் கொண்டாள்.

கியூரிடோ அவள் வார்த்தைகளைக் கேட்பதாய் இல்லை. மௌனமாக நின்று கொண்டிருந்தான்.

"கியூரிடோ, உன்னைப் பெற்றெடுத்த பாசம்தான் என்னை உலகத்தார் முன் கொடுமைக்காரியாக்கி விட்டது. கொலைகாரியாக்கியது. உன் தந்தை உன்னை அடித்துவிட்டான் என்பதைப் பொறுக்க மாட்டாமல்தானே அவனைக் கொன்றேன்! இன்னும் உன்மீதுள்ள வாஞ்சை வற்றிப் போகவில்லை! கியூரிடோ, இனியாவது வரமாட்டாயா?"

அவள் குரலில் ஏக்கம், பணிவு, பாசம், வாஞ்சை எல்லாம் இருந்தன! தாயின் உருக்கமான வார்த்தைகளைக் கேட்டபொழுது உண்மையில் அவன் அழுதுவிட்டான்.

"அம்மா, என்னை வீணாகத் தொந்தரவு செய்யாதே! இனிமேல் என்னைப் பார்க்க வராதே! இதுவே கடைசித் தடவையாயிருக்கட்டும். நான் ரோசாலியாவை மணந்து கொள்ளப் போகிறேன். என்னை மன்னித்து விடு" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமல் போய்விட்டான்.

"ரோசாலியா!" விசட்டுவின் தலையில் ஓங்கியடித்தது போல் இருந்தன அவனது வார்த்தைகள்! அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்த உலகமே ஒன்றுகூடிச் சதி செய்து தன் அன்புப் பாசத்திலிருந்து தனது மகனை அறுத்துக் கொண்டு போவதுபோல் தோன்றியது. விசட்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினாள்! அவள் உள்ளத்தில் ரோசாலியா

முள்ளைப்போல் உறுத்திக் கொண்டிருந்தாள்.

●

**அ**ன்று மாலை பூங்காவிலே இரண்டு புதுமலர்கள் இதழ் விரித்து மலர்ந்தன. நாளை அந்த மலர்களின் வாழ்க்கையிலே புது அத்தியாயம் தொடங்கப் போகிறது. ரோசாலியா, கியூரிடோவின் இன்ப அணைப்பிலே இறுகிக் கிடந்தாள். மறுநாள் சூரியனோடு உதிக்கப் போகும் தங்களது புது வாழ்வைப்பற்றி ஏதேதோ பேசினர். இன்பக் கோட்டைகள் கட்டினர். நேரம் சந்தடி செய்யாமல் ஓடிக்கொண்டிருந்தது. ரோசாலியாவும் கியூரிடோவும் பிரியா விடை பெற்றுப் பிரிந்தனர்.

ரோசாலியா இன்ப நினைவுகளில் மிதந்து கொண்டே வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளது எண்ணம் தனக்கும் கியூரிடோவுக்கும் மறுநாள் நடக்கப் போகும் திருமணத்தில் ஒன்றியிருந்தது.

நிலவு இல்லாத வானம். எங்கும் இருள்! ரோசாலியா அந்தக் கட்டிடத்து வாசலில் நுழைந்தாள். எங்கேயோ ஒரு மூலையில் எண்ணெய் இல்லாமல் ஒரு விளக்கில் திரிமட்டும் எரிந்து கருகிக்கொண்டிருந்தது. அப்போது மறைந்திருந்த ஒரு உருவம், பூனை எலியின்மீது பாய்வதைப்போல ரோசாலியா மீது பாய்ந்தது! திடீரென்று தாக்கப்பட்ட ரோசாலியா கீழே சாய்ந்தாள்! அவள்மேல் விசட்டு!

புதிய காவியம் —
கொடி முல்லை
வாணிதாசன் எழுதியுள்ள
அற்புதமான காதல் ஓவியம்!
தெளிந்த கருத்துக்கள்!
எளிய நடையில்!
விலை அணா 12
பொன்னி ..... சென்னை-2

விசட்டுவின் கையிலிருந்த கட்டாரி அந்த இளம்பெண்ணின் மார்பை ஊடுருவியது!

“மாயக்காரி! என் பிள்ளையை என்னிடமிருந்து பிரித்துவிட்ட நாயே! தொலைந்து போ! இனிமேல் யாரும் என் மகனை என்னிடமிருந்து பிரிக்க முடியாது” என்று வெறிகொண்டவளைப் போல் கூவினாள்.

பிறகென்ன? கியூரிடோ தன் அன்னையின் ‘பாசம்’ உருவாக்கிய வெறும் வெளியில் அலைந்து கொண்டிருந்தான்! தன் பிள்ளையின் மேல் கொண்ட குருட்டுப் பாசத்தினால் இரண்டு கொலைகளைச் செய்த அந்த ‘அன்னை’யோ மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டாள்!

[ஆங்கிலக் கதையைத் தழுவியது]

# பெண்கள் முன்னேற்றம்

மங்கை

## 5

மறுநாள் — அன்று சரசா உற்சாகமாக இருந்தாள். குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்றதும், கூடத்தில் ஒரு நாற்காலியிலமர்ந்து ஏதோ தைத்துக்கொண்டிருந்த அவளது மனம் முந்திய நாள் பார்வதியோடு உரையாடியதுபற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தது. எதையோ எண்ணி இடையிடையே புன்னகையும் புரிந்துகொண்டாள். இன்று அவளுக்குச் சோர்வு தட்டவில்லை. சங்கத் தலைவியோடு பார்வதி வரும் வழியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் சரசா. அவளைக்கண்டு உரையாட வேண்டுமென்று, தட்டியெழுப்பப்பட்ட அவளது உற்சாகம் துடித்துக்கொண்டிருந்தது. கடைசியாக — வெளியே காலடியோசை கேட்டு மலர்ந்த முகத்தோடு எழுந்த சரசா, பார்வதியையும் அவள் தோழி ரமாவையும் வரவேற்று உபசரித்தாள்.

"ரமா, எவ்விதமாவது நமது சங்கத்தில் சரசாவையும் சேர்த்துவிடவேண்டும்! தன்னந்தனியே வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருப்பதால் அவள் உள்ளம் சோர்ந்திருக்கிறதாம்; உற்சாகமிழந்திருக்கிறதாம்! நமது சங்கத்திற்கு வாரமொருமுறை அவள் வந்து ஒரு நாழிப் பொழுதைக் கழித்தாலும் அது அவளை உற்சாகப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை!" என்று ஆரம்பித்தாள் பார்வதி. சரசா சிரித்தாள்.

ரமா தனது அடக்கமான குரலில், "அதற்கென்ன, நன்றாகச் சேரட்டுமே! எத்தனை பெண்கள் அதிகமாகச் சேருகிறார்களோ, அத்தனைக்கும் எனக்குப் பெருமையே! சாதாரண 'லேடீஸ் கிளப்'பைப்போல் வம்பு பேசும் சங்கமல்ல எங்கள் சங்கம்! பெண்களின் முன்னேற்றத்தைக் குறித்து நிறையப் படித்தறியலாம். அதற்காகவே நாங்களும் முயற்சிக்கிறோம்!" என்றாள்.

"பெண்கள் வம்புபேசி வீண் சண்டைகளைத் தூண்டிவிட்டுக் காலத்தை வீணாக்காமல் இம்மாதிரி நல்ல சங்கங்களில் சேர்ந்து அவசியமானதைக் கற்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றாள் சரசா.

"நேற்று நாங்களிருவரும் அழகான உரையாடல் நடத்தினோம். சரசாவிற்கு அப்போது உற்சாகமாயிருந்தது!" என்று

கூறிய பார்வதி புன்னகை புரிந்தாள்.

"நீ என்னிடம் சொன்னுயே — சமையலைப்பற்றித்தானே?" என்று கேட்ட ரமா பார்வதியின் பக்கம் திரும்பினுள்.

"ஆமாம்; பொதுவாகச் சமையலென்ருலே பெண்களுக்கு அழகாகத்தானே இருக்கும்!" என்று பதிலளித்தாள் பார்வதி. பிறகு முந்திய நாள் உரையாடலில் சிலவற்றை எடுத்துரைத்தாள்.

"இவற்றையெல்லாம் கடைப்பிடித்தால் நமது பெண்கள் சமூகம் எத்தனை முன்னேற்றமடையலாம்! வெறும் பேச்சிலும் எழுத்திலும் மட்டிலுமே நின்றுவிடக்கூடாது. செயலிலும் காட்டவேண்டும் இல்லையா?" என்று முடித்தாள்.

"முன்னேற்ற வழியைக் கடைப்பிடிக்கும் பெண்கள் நமது நாட்டில்தான் மிகமிகக் குறைவு! பெண்களுக்கு முன்னே கல்வியறிவில்லாதிருந்தது. இப்போது பெண்கள் படிக்கின்றனர். எனினும் படித்த பெண்கள்கூடச் சமையல் விஷயத்தில் ஆரோக்கிய வழியை மறந்துவிடுகின்றனர்!" என்று துயரத்தோடு மொழிந்தாள் ரமா.

"தங்களது ஆரோக்கியத்தையும் தங்களது குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் பேண வேண்டுமெனில் விஞ்ஞான வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். அநேக ஆயிரம் பெண்களுக்கு விஞ்ஞான வழி தெரியாது, அப்பேர்ப்பட்டவர்களுக்குப் படி... பெண்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். அதுதான் நம் நாட்டில் வழக்கமில்லையே!" என்ருள் பார்வதி.

'விஞ்ஞான வழி! பூ, பூ, இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் காரியம் ஆகாது!' என்று புறக்கணிக்கும் பெண்கள் எவ்வளவு மடமை வாய்ந்தவர்கள்! இன்னின்ன ஆகாரத்தில் இன்னின்ன சத்து இருக்கிறதென்பதை அறிந்து அதன்படியே உணவுப்பொருள்களை மாற்றி மாற்றிச் சமைக்க வேண்டும். என்றும் 'பருப்புக் கறி' வைப்பதினுல் பயனில்லை" என்ருள் ரமா.

சரசுவின் கண்கள் உற்சாகத்தால் விரிந்தன. "இன்ன உணவில் இன்ன சத்து இருக்கிறதென்பதை எவ்விதம் அறியலாம்?" என்று கேட்டாள்.

ரமா கூறினுள்: "படித்துத்தான் அறிய வேண்டும். படிப்பற்றவர்க்குப் படித்தவர்கள் கற்றுக்கொடுத்துப் புரியவைக்க வேண்டும். ஆரோக்கியமாக வாழ விரும்புகிறவர்கள் சத்துள்ள ஆகாரங்களையே உண்ண முயற்சிப்பார்கள். உதாரணமாக — மூன்று வகையான சத்துக்கள் இருக்கின்றன. நாம் உண்ணும் ஆகாரத்தில் அம்மூன்று சத்துக்களும் இருந்தாகவேண்டும். அவை 'கார்போஹைடிரேட் (Carbohydrate), பிரோட்டீன் (Protein), கொழுப்பு (Fat)' என்பவை. கார்போஹைடிரேட்டில் பசையும் தித்திப்பும் உண்டு. உருளைக்கிழங்கு நல்ல ஆகாரம்.




தேனும் அப்படியே. பெண்கள் உருளைக்கிழங்கை அவசியம் அடிக்கடி சமைக்க வேண்டும். முட்டையின் வெள்ளைக் கருவிலும் இறைச்சியிலும் 'பிரோட்டீன்' உண்டு. பாலிலும் உண்டு. செடிகளிலும் அந்தச் சத்து உண்டு. ஆதலால் மரக்கறி உண்ணுகிறவர்கள் அந்த நல்ல சத்தைப் பெறுகிறார்கள். ஆனால் அழுகிப்போன மரக்கறிகளில் அந்தச் சத்து செத்துப்போவதால் அதை உபயோகிப்பது மிகவும் ஆபத்து. உருளைக்கிழங்கில் 'கார்போஹைடிரேட்' இருப்பதைப் போல மற்றும் மரக்கறிகளில் புரோட்டீன் ஏராளம் இல்லை. ஆதலால் மரக்கறி உண்ணுகிறவர்கள் ஏராளம் உண்ணவேண்டும். அப்போது தான் நிறையச் சத்தைப் பெற முடியும். கொட்டை வகைகள் பீன்ஸ், பச்சைக் கடலை முதலியவைகளில் நிறைய இருக்கிறது. வெண்ணெய், எண்ணெய் முதலியவைகளில் கொழுப்பைக் காணலாம். ஒரு ஆகாரத்திலேயே தனிச்சத்து ஒன்றைக் காணமுடியாது. இறைச்சியில் புரோட்டீன் உண்டு. அத்தோடு கொழுப்பும் சிறிது காணலாம். ரொட்டியோ பீன்ஸோ சாப்பிடுகையில் புரோட்டீனையும் பசைச் சத்தையும் சேர்த்துச் சாப்பிடுகிறோம். முட்டையில் புரோட்டீனையும் கொழுப்பையும் சுவைக்கிறோம். பாலில் மூன்று சத்துக்களும் உண்டு. அதோடு தண்ணீரும் கலந்துள்ளது. அதனால் தான் பாலை ஆரோக்கியமான உணவு என்கிறோம். இம்மூன்று சத்துக்களும் நமது உடம்பில் வெவ்வேறு விதமாகப் பயன்படுகின்றன. அவற்றில் 'கார்போஹைடிரேட்' அதிகச் சத்தைக் கொடுக்கின்றது. அது நமது தசைகளை உறுதிப்படுத்திக் கடினமான வேலைகளைச் செய்ய உதவுகிறது. கொழுப்புச் சத்தை நாம் மிகுதியாக உபயோகிக்க வேண்டியதில்லை. ஏனெனில், அது அதிகச் சூட்டைக் கொடுப்பதால் குளிர்காலங்களிலேயே அதை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். புரோட்டீன் உடலை வளரச் செய்கிறது. எனவே, நாம் சமையல் செய்வதில் இம்மூன்று சத்துக்களும் நிரம்பிய உணவுகளையே மாற்றி மாற்றிச் சமைக்க வேண்டும்.

இதைப் புள்ளி விவரமாக வைத்துக்கொள்ள வேண்டும். என்றும் ஒரே தினுசான உணவில் எவ்வித பயனும் இல்லை. அதோடு "விட்டமின்" என்று சொல்லப்படும் சத்துக்களும் நம் உடம்பினுள் செல்ல வேண்டும். அவை இரும்பு, சுண்ணும்பு போன்ற உலோகச் சத்தாதலினுல் ஒரு சிறிதளவே உள்ளே போகவேண்டும். 'விட்டமின்' சிறிதும் இல்லையென்ருல் சரியாக ஜீரணமாகாது. ஜலதோஷம் வெகுவில் பிடித்துவிடும்; நமது எலும்புகள் சரியாக அமையாது. இக்காரணத்தால் தோல் வியாதிகள் ஏற்படும். 'விட்டமின்' பாலிலும், பழங்களிலும், புதிய பச்சை மரக்கறிகளிலும் உண்டு. ஆரஞ்சுப் பழத்தில் விட்டமின் ஏராளம் உண்டு. ஆரஞ்சுப் பழத்தைக் குழந்தைகள் அதிகம் உபயோகிக்க வேண்டும். இன்னென்று: நமது உடம்பிற்குத் தண்ணீர் மிக்க அவசியமானதால் பெரியவர்கள் ஒரு நாளைக்கு 10 முதல் 12 டம்ளர் வரை தண்ணீர் அவசியம் குடிக்க வேண்டும். வெறும் தண்ணீர் மட்டுமல்ல; சிறிது தேநீரோ காப்பியோ அருந்தினுலும் கெடுதியல்ல. ஒன்றைமட்டும் பெண்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். என்றும் ஒரே வகை உணவைச் சமைக்காமல் சத்துள்ள பல்வேறு வகை உணவுகளைப் பலவகைகளில் மாறி மாறிச் சமைக்க வேண்டும்."

ரமாவின் பேச்சு மற்ற இருவர்க்கும் நீண்ட பிரசங்கமாகத் தோ[illegible]; ரசமாகவே இருந்த[illegible].

"வாரத்திற்கொருமுறை ஞாயிற்றுக்கிழமை அன்றே சங்கம் கூடுகிறது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாதலால் குழந்தைகளும் மற்றவர்களும் வீட்டிலிருப்பார்களாதலால் பெண்கள் சிறிது வெளியே செல்வதற்கு வசதியாக இருக்கும். அவ்வசதியைக் கருதியே ஞாயிற்றுக்கிழமையைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஏன் சரசா, உன் எண்ணமென்ன?" என்று கேட்ட ரமா அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

"தாராளமாக வருகிறேன். என்னையும் ஒரு'மெம்ப'ராகச் சேர்த்துக்கொள்ளுங்கள். என்னுல் முடிந்தவரை வேறு சில பெண்களையும் அழைத்துவர முயற்சிக்கிறேன்" என்ருள் சரசா உற்சாகமாக.

சிறிது நேரம் சென்றபின் ரமாவும் பார்வதியும் விடைபெற்று எழுந்தனர்.

"சரசு, வரும் ஞாயிற்றுக்கிழமை — நமது சங்கம்! மறந்துவிடாதே! நான்கு மணிக்குத் தயாராகிவிடு. நான் வந்து அழைத்துப்போகிறேன்" என்ருள் பார்வதி.

"எவ்விதமாவது வந்துவிட வேண்டும். கணவன் சாக்குச் செல்லாது!" என்று வேடிக்கையாகக் கூறிய ரமா கைகூப்பி வணங்கினுள். மூவரும் சிரித்தனர்.

# ண தண்டனை

புதுமைச்சித்தன்

……"வாழவேண்டிய மக்களை வாழவிடாத இன்றைய சமுதாயத்தின் இருள்நிலை போக்க இடையறாது தொண்டாற்றும் கடமையாளர்களை, கைதியாக்கிச் சிறைபிடித்துச் சித்திரவதை செய்து, மனிதத் தன்மையற்று மிருகத்தனமாய் நடந்துகொண்ட உனக்கு, மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது… தண்டனை, கூடிய விரைவில் சந்தர்ப்பத்தை அனுசரித்து நிறைவேற்றப்படும்…

"தொண்டர்களைக் கைது செய்…சிறையிலடை……தண்டனை விதி…சட்ட பூர்வமாக நடந்துகொள்…ஆனால் கொள்கைக்காக உயிர் கொடுக்கவும் சித்தமாயிருக்கும் தொண்டர்களிடம், எதற்காக மனிதத் தன்மையற்ற முறையில் நடந்துகொள்ளவேண்டும்?…

"மனிதமனம் விசாலமானது; மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய கருணை, அன்பு, இரக்கம் யாவும் இடம் பெற முடிந்த விரிவான இடம். மிருக உள்ளம் கொண்ட உனக்கு, நமக்குக் கிடைத்திருக்கும் சாட்சியங்களை ஆதாரமாக வைத்து விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்கின்றோம்…உனக்கு மரண தண்டனை!

இப்படிக்கு
புரட்சிக்கழக மத்திய செயற்குழு"

இந்தக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் பன்முறை படித்தார், போலீஸ் இன்ஸ்பெக்டர் ராகவன்.

அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. தீராத குழப்பம்! கடிதம் தனக்குத்தானா என்ற சந்தேகம் வேறு! விலாசத்தைப் பார்த்தார்.

"போலீஸ் இன்ஸ்பெக்டர், ராகவன். பிரத்யேகப் பார்வை" எனத் தெளிவாக எழுதப்பட்டிருந்தது.

"எனக்கு மரண தண்டனை?… புரட்சி—புரட்சியென்று பிதற்றித் திரியும் இந்த நாசகாரக் கூட்டம் விதித்திருக்கிறது…" இலேசாக அவர் சிரித்துக்கொண்டார்.

"கொன்று தின்னாமல், வேங்கைக்கு நான் மன்னிப்பளித்தேன் என்று வெள்ளாடு சொல்வதைப்போலிருக்கிறது, இந்தப் பயல்கள் கதை…எனக்கு மரண தண்டனை விதித்திருக்கின்றான்களாம்…இனிக் கொஞ்சங்கூட இரக்கம் காட்டாமல் கண்ட விடத்தில் சுட்டுத் தள்ளவேண்டியதுதான்…"

"புரட்சி செய்கின்றான்களாம், புரட்சி! மடப்பயல்கள்…குத்துவதும், கொலை செய்வதும், கொள்ளையடிப்பதும்தான் புரட்சிபோலிருக்கிறது. புரட்சி என்ற போர்வைக்குள் கொள்ளையடிக்கும் பயங்கரக் கூட்டம்… சமுதாய நலன்களின் பராமரிப்பிற்கான சட்டத்தை, வெறும்

கேலிக் கூத்தாக்கிவிட நினைக்கும் நாசகாரக் கும்பல்..." அவர் உள்ளம் தனக்குத்தானே பேசிக் கொண்டது.

ஜன்னல் கதவு திறந்திருந்தது. வெளியில் 'உஸ்' என்ற ஊளையுடன் பேய்க்காற்று வீசிக் கொண்டிருந்தது. திடீரென்று ஓரிரு நாய்கள் ஓயாமல் குரைத்தன!

ஜன்னல் வழியாக வெளியில் தாவியது அவர் பார்வை!

தெருவில்...வாழ்வின் நம்பிக்கைகளை அடியோடு இழந்துவிட்ட மனங்கொண்ட ஒரு பிச்சைக்காரன்! அவனைக் கண்டு தான் நாய்கள் குரைத்தன. மிருகத்தின் கண்களுக்குக் கூடக் கேவலமான ஜீவனாகிவிட்டான் அவன்.

"பசிக்கிறது!...சோறுதா..."

"சோறு இல்லை..."

"பசி தாள முடியவில்லையே!..."

"சோறு கிடையாது..."

"சோறு கிடையாதா?..."

"கிடையாது..."

"சோறு கிடையவே கிடையாதா?..."

"கிடையாது..."

"திருடுவேன்......பசியைத் தணித்துக்கொள்ளத் திருடுவேன்...அது என் உரிமை!..."

"திருடினால் தண்டிப்பேன்... சிறையிலடைப்பேன்...அது என் கடமை!"

"மடையா......தண்டித்துச் சிறையிலடைக்கத் தெரிந்த நீ, எனக்குச் சோறு கொடுத்து என் [illegible] போக்கவும் தெரிந்திரு[illegible]ண்டும்!..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. குற்றங்களுக்குத் தண்டனையளிக்கத்தான் தெரியும்...!"

"அந்தக் குற்றங்களுக்கான மூல காரணத்தை ஆராய்ந்து அதை நீக்கவேண்டியதுதானே சட்டத்தின் கடமை..."

"இல்லை...சட்டத்தின் கடமை தண்டிக்கவேண்டியது..."

"சீ! அது மிருகத்தனம்!"

பார்வையை வேறு பக்கம் திருப்பினார் ராகவன். உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் வெறியாட்டம் ஆடின. கையிலிருக்கும் கடிதத்தைப் படித்தார்.

●

எத்தனையோ வாரங்கள் சென்றன!

ரயில்கள் கவிழ்ந்தன! போலீஸ் ஸ்டேஷன்கள் தாக்கப்பட்டன! தானியக் களஞ்சியங்கள் சூரையாடப்பட்டன! நாடெங்கும் கலவரம்! புரட்சிக் கழகத்தாரின் அட்டகாசம் ஓய்ந்தபாடில்லை!

அன்றொரு நாள்!

அருகிலிருக்கும் ஒரு கிராமத்தில், ஒரு பெரிய நிலப்புரபுவின் தானியக் களஞ்சியத்தை, புரட்சிக் கழகத்தார் அன்றிரவு சூரையாடப்போகும் தகவல், முன் கூட்டியே போலீஸ் இலாகாவிற்குக் கிடைத்துவிட்டது.

போலீஸ் சூப்ரின்டெண்ட், ராகவனை அழைத்தார். அன்றிரவு, அக்கிராமத்தில் நடக்க

விருக்கும் [illegible] அடக்கும் கடமையில் [illegible] நிறைந்த பொறுப்பை ராகவனிடம் ஒப்படைத்தார். ராகவன் மறுக்கவில்லை! முடிந்தவரை புரட்சிக் கழகத்தாரைக் கைது செய்யச் சொல்லியும், முடியாவிட்டால் சுட்டுக் கொன்று விடும்படியும் சூப்ரின்டெண்ட், ராகவனிடம் சொல்லியனுப்பினர்.

"உனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது," என்ற புரட்சிக் கழகத்தாரின் கடிதத்தைப்பற்றிய நினைவு, அவர் சிந்தனை வட்டத்திற்குள் மிதந்து கொண்டிருந்தது.

சேடய இழந்துவிட்ட தாயின் பிலாக்கணம் போன்ற அலறலுடன், விசேஷ போலீஸ் படையைச் சுமந்த போலீஸ் கவச மோட்டார் விரைந்தது.

●

அன்றிரவு!

எங்கும் இருள்... காரிருள்... மாமறைவில் – புதரில் – பள்ளத் தாக்குகளில், விசேஷ போலீஸ் படையினர் பதுங்கிக்கொண்டிருந்தனர். குண்டுகளைக் கக்குவதற்குத் தயாராய் இருந்தன, துப்பாக்கிகள்.

இன்ஸ்பெக்டர் ராகவன் பாதுகாப்பு மிக்க ஓரிடத்தில் ஆயுதபாணியாக இருந்தார். அவரருகில் இரு போலீஸ்காரர்கள்—மெய்க்காப்பாளர்கள் மாதிரி! நேரம் விரைந்துகொண்டிருந்தது!

'டுமீல்...' என்று ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம். அதைத் தொடர்ந்து வெடிச் சத்தங்கள் ஓயாது ஒலிக்க ஆரம்பித்தன. புரட்சிக் கழகத்தார் போலீஸ் படையை முன்னேறவிடாதவண்ணம் தாக்கிக்கொண்டிருந்தனர். துப்பாக்கி வெடிகளின் இரைச்சல் ஓயவே இல்லை.

இன்ஸ்பெக்டர் ராகவனுக்கு ஒரு எண்ணம் பிறந்தது.

போலீஸ் படையை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒரு பிரிவை முன்னும் மற்றொரு பிரிவைப் பின்னும் தாக்கச் செய்தால்...! புரட்சிக் கழகத்தாரைச் சுலபமாகப் பிடித்து விடலாம் என்றெண்ணினர். ஆனல்—அவர் எண்ணத்தில் மண் விழுந்தது. புரட்சிக் கழகத்தாரில் சரிபாதிப்பேர் தாக்கிய வண்ணமே தனியாகப் பிரிந்து சென்று, போலீஸ் படையைப் பின்புறமாகத் தாக்க ஆரம்பித்து விட்டனர். போலீஸ் படைகளின் நிலை அபாயத்திற்குள்ளாகிவிட்டது. புரட்சிக்கழகத்தாரின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்டு வந்ததின் பலன் இது!

திடீரென்று ஒரு குண்டு ராகவனின் காதருகில் பட்டும் படாததுமாக உராய்ந்துகொண்டு சென்றது. அடுத்தடுத்து அவருடன் இருந்த போலீஸ்காரர்கள் இருவரும் குண்டு பட்டுச் சவமாகக் கீழே சாய்ந்தனர்.

ராகவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. தம்மை இலக்கு வைத்துத்தான் புரட்சிக் கழகத்தார் தாக்குகிறார்களென்பது தெரிந்துவிட்டது.

"உமக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.... தண்டனை, கூடிய விரைவில் சந்தர்ப்பத்தையனுசரித்து நிறைவேற்றப்படும்"—கடிதத்தின் வாசகம் அவர் சிந்தனையில் பளிச்சிட்டது. அந்த மரண தண்டனையை நிறைவேற்றத்தான் முழு மூச்சுடன் தம்மைத் தாக்குகின்றனர் என்றெண்ணினார்... இருபுறமும் புரட்சிக் கழகத்தார் முன்னேறிக்கொண்டிருந்தனர். புதுப் பலம் வந்தாலொழிய நிலைமையைச் சமாளிக்க முடியாதுபோல் தோன்றியது.

"விர்"ரென்று பாய்ந்து வந்த ஒரு குண்டு அவர் தொடையைத் துளைத்துக்கொண்டு சென்றது. மற்றும் இரு குண்டுகள் அவர் முழங்காலுக்குக் கீழ் படுகாயமுண்டாக்கிவிட்டன! பீறிட்டு வழிந்தது குருதி!

அளவிற்கு மீறிய இரத்தம் வெளிப்பட்டுவிட்டது. வலி தாள முடியவில்லை. உடலில் சோர்வு! துப்பாக்கியேந்த முடியாத சோர்வு! கண்கள் இருண்டன. மயக்கம் வரும்போல் தோன்றியது!

தரையோடு தரையாகப் படுத்தபடி, புரட்சிக் கழகத்தாரின் கண்களில் படாமல் நகர்ந்தார். உடல் மிகவும் சோர்வடைந்தது. இருந்தாலும், தப்பித்துச் செல்லவேண்டுமென்ற ஆவல் வலிமையைத் தந்தது. நகர்ந்தபடி கிராம வீதிக்கு வந்தார். எழுந்து தள்ளாடித் தள்ளாடி நடந்து, ஒரு வீட்டுக் கதவைத் தட்டினார்.

கதவு [illegible] நேரம் திறக்கப் படவே இல்[illegible] காரணம்? பீதி! அவரும் விடாமல் தட்டினார்.

"யாரது........." முடிவாகக் கேள்வி பிறந்தது, வீட்டினுள்ளிருந்து!

"போலீஸ்.........கதவைத் திற..."

கதவு திறக்கப்பட்டது. கையில் ஒரு 'அரிக்கேன்' விளக்குடன், கலவரம் நிறைந்த முகத்தினாய் ஒரு விவசாயி காட்சியளித்தான். போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டதும் பரபரப்படைந்தான். அவர் உடலிலிருந்து வழிந்து உறைந்திருக்கும் இரத்தம், இன்னும் அதிகக் கலவரத்தைத் தந்தது.

"என்னாங்க வேணும்?" — அவன் குரலில் பரிவும் பரபரப்பும் காணப்பட்டன.

"கொஞ்சம் தண்ணீர் வேணும்" என்றார், தாகம் நிறைந்த குரலில்.

அவன் உடனே தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தான். அவருக்கு அந்தக் கடிதத்தின் நினைவு வந்தது.

"உனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது ......... சந்தர்ப்பத்தையனுசரித்துத் தண்டனை கூடிய விரைவில் நிறைவேற்றப்படும்..." என்று யாரோ சொல்வது போன்ற பிரமை!

தண்ணீர் கொண்டுவந்த இவன் புரட்சிக் கழகத்தாரின் கையாளாய் இருந்து, தண்ணீரில் விஷம் கலந்திருந்தானானால்...!

தண்ணீரை ... மனறு சொல்லிவிட்டா... அவன் ஆச்சரியமடைந்தான்!

"ஏனப்பா... இங்கு ஏதாவது ஆஸ்பத்திரி இருக்கிறதா?..." என்று கேட்டார். முதல் சிகிச்சையாவது செய்துகொள்ளலாமென்ற எண்ணம்!

"இருக்குதுங்க...... மூணு மாசத்துக்கு முந்தி ஒரு டாக்டரு வந்து இங்கே ஆஸ்பத்திரி வச்சிருக்காரு. வைத்திய உதவி செஞ்சிக்கிட்டும், ஒளிஞ்ச நேரத்துலே படிப்புச் சொல்லித் தந்துக்கிட்டும் இங்கேயே தங்கியிருக்காரு! ரொம்ப நல்ல மனுஷருங்க... எந்த நேரத்துலே கூப்புட்டாலும் அலுக்காமெ வருவாருங்க..."

"எங்கே இருக்கு ஆஸ்பத்திரி?"

"இந்தாலே கிட்டேதாங்க ...... இந்த வூட்டுக்கு அஞ்சாவது வூடுதாங்க ஆஸ்பத்திரி!..."

"டாக்டரும் அங்கேயேதான் இருப்பாரோ?..."

"ஆமாங்க..."

"கொஞ்சம் என்னோடு வந்து ஆஸ்பத்திரியைக் காட்ட முடியுமா?..."

"தாராளமாங்க..."

இருவரும் நடந்தனர். அப்பொழுதும் துப்பாக்கி வெடிச் சத்தம் ஓயவில்லே!

●

இருவரும் ஆஸ்பத்திரியை வந்தடைந்தனர். கிராமவாசி கதவைத் தட்டினுன்.

"யாரது?" — என்ற சாந்தமான கேள்வியுடன் கதவைத் திறந்தார் டாக்டர்.

பலத்த குண்டுக் காயத்தால் உறைந்துவிட்ட இரத்தக் கறையுடன் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்... அரிக்கேன் விளக்குடன் ஒரு கிராம விவசாயி...

டாக்டர் பார்த்தார்!

"உள்ளே வாருங்கள்" என்று முன்னே நடந்தார். இருவரும் டாக்டரைத் தொடர்ந்தனர்.

எவரையும் வசீகரிக்கும் சாந்தம் நிறைந்த முகம்... நல்ல வாலிபப் பருவம்...அமைதியான பெருமித நடை....

டாக்டரின் தோற்றம் ராகவனைக் கவர்ந்தது!

"இப்படி உட்காருங்கள்..." என்று ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டினுர் டாக்டர். ராகவன் உட்கார்ந்தார்.

"டாக்டர்... இந்த நள்ளிரவில் வந்து தொந்தரவு கொடுப்பதற்கு மன்னிக்கவேண்டும்!..." என்று ஆரம்பித்தார் ராகவன்.

"இன்ஸ்பெக்டர் சார் ... ... இதெல்லாம் ஒரு தொந்திரவாகுமா?... இது என் கடமை! கடமையைச் செய்வதற்காக என்றுமே நான் சலிப்படையமாட்டேன்..." என்ருர் டாக்டர், சாந்தம் மிகுந்த புன்னகையுடன்!

"இதோ பாருங்கள், டாக்டர் ... குண்டுக் காயங்களே! கடமையைச் செய்யும்பொழுது நான் பெற்ற பரிசு!......"

"அதுதானே உலக இயல்பு!" என்றபடியே டாக்டர் எழுந்தார்.

முதலில் கிருமி நாசினி மருந்தால், காயங்களைச் சுத்தமாகக் கழுவினார். துப்பாக்கி ரவை ஏதாவது உடலுக்குள் தங்கியிருக்கிறதாவென்று பார்த்தார். அப்படியொன்றும் இல்லை! புரையோடாமல் இருப்பதற்கும், உடனடியாகப் புண்ணை ஆற்றுவதற்குமான, சக்தியுடன் வேலை செய்யும் மருந்தை வைத்துக் கட்டினார்.

அப்பொழுது இன்ஸ்பெக்டர் ராகவன் கேட்டார்:

"ஏன் டாக்டர், நீங்கள் இந்தக் கிராமத்திலேயே தங்கியிருக்கின்றீர்கள்?..."

டாக்டர் இலேசாகச் சிரித்தார்!

"இன்ஸ்பெக்டர், சார்... காட்டிலும் கரடுமுரடான இடங்களிலும், தனியாக இருந்துகொண்டு தவம் செய்கிறேன் — யோகம் பயில்கிறேன் என்பதெல்லாம் வெறும் கதைப்பு! ஊர் நலமடைய உழைப்பதுதான், உண்மையில் யோகம்! மேலும் — கல்வி வாசனையில்லாத கிராம மக்களுக்குச் செய்யும் சேவைதான், மகத்தான சேவை! உயிரற்ற படாடோபத்தால் — அறிவுக் கலப்பற்ற பகட்டுத்தனமான அழகால் — போலித்தனம் நிறைந்த நாகரிகத்தால், களங்கம் படிந்துவிட்ட நகரங்களில், ஆத்மப் புனிதத்துடன் தூய வாழ்வு நடத்த விரும்பும் என் போன்றவன் வாழ்க்கை நடத்த முடியாது. என் இலட்சியத்திற்கு ஏற்ற இடம், இதுபோன்ற கிராமம் தான்..." என்றார், டாக்டர்.

அவர் பேச்சு, இன்ஸ்பெக்டரின் நெஞ்சைக் கவர்ந்தது. வேலையெல்லாம் ஒருவாறு முடிந்தது. டாக்டர், கிருமி நாசினி மருந்தால் கைகழுவிவிட்டுக் கையைத் துண்டில் துடைத்துக்கொண்டார்.

இன்ஸ்பெக்டர் ராகவன், நன்றிதெரிவித்துவிட்டுச்செல்வதற்காக எழுந்தார். எழுந்தவர், உடனே உட்கார்ந்து விட்டார். சோர்வு, ஒருபுறமாகக் கொண்டு தள்ளியது.

"இன்ஸ்பெக்டர், சார்... காயங்கள் பலத்த காயமாகக் காணப்படுகின்றன! அளவிற்கு மீறிய இரத்தம் வெளிப்பட்டுச் சேதமடைந்திருக்க வேண்டும்...... ஆகையால் — ஒன்று செய்யுங்கள்......" என்றார் டாக்டர்.

"என்ன டாக்டர்?" — ஆவலுடன் கேட்டார் ராகவன்.

"ஒன்றுமில்லை! ஏராளமான இரத்தம் வெளிப்பட்டதால் ஏற்பட்ட பலவீனத்தைத் தடுக்கும் பொருட்டு ஒரு இஞ்ஜெக்ஷன் செய்து கொள்ளுங்கள்..."

"செய்துகொள்கிறேன். டாக்டர். முதலில், களைதீரப் பருக ஏதாவது பானம் வேண்டும், டாக்டர்......"

"பால்கொண்டுவரச் சொல்கிறேன்" என்ற டாக்டர், அங்கிருந்த கிராமவாசியிடம் எப்படியாவது கொஞ்சம் பால் கொண்டு வருமாறு கூறினார்.

கிராமவாசிசென்றுவிட்டான்.

"என் டாக்டா[illegible]வந்த ஆள் எப்படி? நம்பிக்கையானவன் தானு?—" என்று கேட்டார் ராகவன்.

"என் இப்படிக் கேட்கிறீர்கள்? மிகமிக நம்பிக்கையானவன். மேலும் — கிராமக் காவற்காரன்..." என்ருர் டாக்டர்.

"இல்லே...... கேட்டேன்..." என்று மழுப்பினுர் ராகவன்.

டாக்டர், 'சிரஞ்சி'யைக் கையிலெடுத்தார். ஊசியின் மூலமாக அதில் மருந்தை இழுத்தார். ஸ்பிரிட்டில் நனேக்கப்பட்ட பஞ்சால், காயம்படாத தொடையைத் தேய்த்துச் சுத்தப்படுத்தி விட்டு ஊசியைக் குத்தினுர். விஞடிகள், ஒன்று இரண்டு என விரைந்தன! சிரஞ்சிக்குள் இருந்த மருந்து உடலுக்குள் செலுத்தப்பட்டது.

சிறிது நேரம் சென்றது!

"டாக்டர்..." என்ருர், இன்ஸ்பெக்டர் ராகவன் தளர்ந்த குரலில்!

"என்ன, இன்ஸ்பெக்டர் சார்..." என்று கேட்டார் டாக்டர்.

"கண் இருளுகிறது, டாக்டர். எப்பொழுதுமில்லாமல், கைகால்கள் செயலற்றுச் சோர்வடைகின்றன... மயக்கம் வருகிறது, டாக்டர்..." என்றபடியே நாற்காலியில் சாய்ந்தார் இன்ஸ்பெக்டர்.

டாக்டர் சிரித்தார்!

இன்ஸ்பெக்டர் உடலில் சவத்திற்குடைய "விறைப்பு" தோன்ற ஆரம்பித்தது. சிறிது சிறிதாக ஒடுங்கிக் கொண்டே வந்த இதயத் துடிப்பு, முடிவில் சில நிமிடங்களுக்கெல்லாம் நின்றேவிட்டது.

டாக்டர் சிரித்தார்!

"வாழவேண்டிய மக்களே வாழவிடாத இன்றைய சமுதாயத்தின் இருள்நிலே போக்க, இடையருது தொண்டாற்றும் கடமையாளர்களே, சிறைபிடித்துச் சித்திரவதை செய்து மனிதத்தன்மையற்ற முறையில் நடந்துகொண்ட உனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனே, கூடிய விரைவில் சந்தர்ப்பத்தையனுசரித்து நிறைவேற்றப்பட்டது.

இப்படிக்கு,

புரட்சிக் கழக மத்திய

செயற்குழு"

— என்ற துண்டுக் கடிதம் அங்கிருந்த ஒரு மேஜைமேல் கிடந்தது.

ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி நடந்த டாக்டர், துப்பாக்கியேந்திப் போரிட்டுக்கொண்டிருக்கும் புரட்சிக் கழகத்தாருடன் ஐக்கியமானுர்.

அப்பொழுதும் துப்பாக்கி வெடிச் சத்தம் முழங்கிக் கொண்டுதான் இருந்தது—வாழ்வளிக்க வரும் வருங்காலத்தின் நம்பிக்கை முரசம் மாதிரி!

போன் : 2549 தந்தி : "IMAGE"

# எங்களிடம்

ஜன்னல் கண்ணாடிகள்
பலநிறக் கண்ணாடிகள்
முகம் பார்க்கும் கண்ணாடிகள்
மூன்றொட்டுப் பலகைகள்
படங்கள், சட்டங்கள்
மேசைக் கண்ணாடிகள்

முதலியன கிடைக்கின்றன.

**R. ETHIRAJIAH & SONS**

103, DEVARAJA MUDALI STREET, P. T. MADRAS 3.

Prize winners of C. No. 53. Ist Prize (1) P. K. V. Thimmappa, Almpur (2) Srikar Misra, Cuttack (3) K. P. Banarsi, Patna (4) Gulshanrai, Bangalore (5) J. P. Bhagat, Dhanbad (6) H. Sanyal, Chupra. In addition one person is awarded 2nd prize 32 persons 3rd prize and 5 persons 5th prize.

Full particulars are published in the Rainbow dated 10—7—51

ரிஜிஸ்டர் — போட்டி

நெ. 249 — ரூ. **25,000** பரிசு — நெ. 55

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S NO 53 69 to 84=306

| | | | |
|---|---|---|---|
| 72 | 73 | 77 | 84 |
| 82 | 79 | 75 | 70 |
| 83 | 78 | 74 | 71 |
| 69 | 76 | 80 | 81 |

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 53 on 7/6/51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

*For The Premier Bank of India Ltd.*

V Ramanathan
28.6.51
Madras.

முடிவு தேதி 27-7-51 — விடை 3-8-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

314

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 71 முதல் 86 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினுலும் 314 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானுலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

# THE RAINBOW COMPETITIONS No, 55

28 (14) Thandavarayagramani Street, MADRAS - 21

# டம், டம், டமாரம்!

டி. ஜே. இன்பராஜ்



ராமு கோடை விடுமுறையில் பட்டணத்திலுள்ள அவன் மாமா வீட்டிற்குச் சென்றிருந்தான். ஒவ்வொரு நாளும் அவனைப் பல இடங்களுக்கு அவன் மாமா அழைத்துச் சென்றார். ராமு ஊருக்குப் புறப்படுவதற்கு முன் தினம் மாமாவுடன் மூர்மார்க்கெட்டிற்குச் சென்றான். அங்கு பலவிதமான பொருட்கள் விற்கும் கடைகளைப் பார்த்தான்.

ராமுவும் அவன் மாமாவும் கடைசியாக ஒரு கடைக்கு வந்தனர். கடை முழுவதும் விளையாட்டுச் சாமான்கள் நிறைந்திருந்தன. “ராமு, நீ நாளைக்கு ஊருக்குப் போகிறாயல்லவா? உனக்கு என்ன விளையாட்டுச் சாமான் வேண்டும்?” என்று மாமா அவனைக் கேட்டார்.

ராமு விளையாட்டுச் சாமான்களை ஒருமுறை கவனித்தான். மேலே தொங்கிக்கொண்டிருந்த ஒரு அழகிய டமாரம் அவனைக் கவர்ந்தது. டமாரத்தின் ஓரங்களில் அழகான படங்கள் பளபளப்புடன் காணப்பட்டன. தோளில் மாட்டிக்கொள்வதற்கு இரு பக்கங்களிலும் வர்ணக் கயிறு கட்டப்பட்டிருந்தது.

“மாமா, அந்த டமாரம் எனக்கு வேண்டும்” என்று ராமு சுட்டிக் காட்டினான். அதன் விலை பத்து ரூபாய். கடைக்காரனிடம் பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு மாமா டமாரத்தை வாங்கினார். ராமு அதைத் தோளில் மாட்டிக்கொண்டு நடந்தான்.

மறுநாள் ராமு ஊருக்கு வந்தான். அப்பா, அம்மா, தாத்தா எல்லோருக்கும் டமாரத்தை அடித்துக் காண்பித்தான். அன்று முழுவதும் அவன் டமாரத்தை நிறுத்தாமல் அடித்துக்கொண்டிருந்தான்.

அம்மா அவனைக் கூப்பிட்டாள். “ராமு, நீ வெளியே போய் டமாரத்தை அடி. இங்கு அடித்தால் உன் தாத்தாவிற்கு இடைஞ்சலாய் இருக்கும்” என்றாள்.

ராமுவின் தாத்தா ராணுவத்தில் இருந்தவர். வயதாகிவிட்டதால் பென்ஷன் பெற்றுக்கொண்டு ராமுவின் வீட்டிலிருந்தார்.



"தாத்தா பட்டாளத்தில் இருந்திருக்கிருரே. இதை விடப் பயங்கரமான துப்பாக்கி சப்தத்தையும் பீரங்கி சப்தத்தையும் கேட்டிருப்பாரே. இந்த சப்தம் அவருக்கு எந்த மூலே?" என்ருன் ராமு.

"நீ அப்படிச் சொல்லகூடாது. இப்பொழுது அவருக்கு வயதாகிவிட்டது. அவர் நிம்மதியாக இருக்க வேண்டாமா?" என்று அம்மா சொன்னுள்.

அன்று முதல் ராமு வீட்டில் டமாரம் அடிப்பதில்லை. டமாரத்தை எடுத்துக்கொண்டு வயலுக்குச் சென்றுவிடுவான்.

ஒருநாள் மாலை ராமுவின் தாத்தா அவனை உலாவப் போகக் கூப்பிட்டார்.

"தாத்தா, நான் டமாரத்தை எடுத்துக்கொண்டு வரலாமா?" என்று அவன் கேட்டான்.

"எடுத்து வா" என்ருர் அவன் தாத்தா. ராமு டமாரத்தைத் தோளில் மாட்டிக்கொண்டு அவருடன் சென்ருன்.

இருவரும் வெகு தூரம் சென்றனர். பாதை ஓரத்தில் ஒரு பெரிய மாம் இருந்தது. அந்த மரத்தில் தூக்கணங்குருவிக் கூடுகள் தொங்கிக்கொண்டிருந்தன.

“தாத்தா, அதோ குருவிக் கூடு. மரத்தில் ஏறிக் குருவி முட்டை எடுத்துக் கொடுங்கள். பள்ளிக்கூட மியூசியத்திற்கு வேண்டும்” என்றான் ராமு.

தாத்தா மரம் ஏறுவதில் கெட்டிக்காரர். சிறு வயதில் அவர் ஏறாத மரமே கிடையாது. வயதான காலத்தில் மரம் ஏறலாமா? தாத்தா யோசித்தார். இருந்தாலும் சீக்கிரம் முட்டையை எடுத்துக்கொண்டு இறங்கிவிடலாமென்று மரத்தில் ஏறினார்.

பக்கத்தில் தொங்கிக்கொண்டிருந்த கூட்டில் முட்டையில்லை. தாத்தா இறங்க ஆரம்பித்தார். “அதோ, அந்தக் கூட்டையும் பார்த்துவிட்டு வாருங்கள்” என்றான் ராமு. அவன் காட்டிய கூடு மரத்தின் உச்சியில் தொங்கிக்கொண்டிருந்தது. அவர் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு உயரே ஏறினார்.

அவர் பாதி உயரம்தான் ஏறியிருப்பார். இரண்டு கால்களும் பிடித்துக்கொண்டன. அப்படியே நின்றுவிட்டார்.

“ராமு, என்னால் கால்களை அசைக்க முடியவில்லை. இரவு முழுவதும் இப்படியே மரத்தில் இருக்கவேண்டியதுதான். நீ, சிறுபிள்ளை. இருட்டில் தனியே எப்படி வீட்டிற்குப் போவாய்?” என்று தாத்தா வருத்தப்பட்டார்.



ராமு டமாரத்தைப் பலமாக அடித்தான். பக்கத்துத் தோட்டத்திலிருந்த இரண்டு பேர் டமாரத்தின் சப்தம் கேட்டு வேகமாக ஓடிவந்தனர். ஒருவன் நீண்ட கயிறும் விளக்கும் கொண்டுவந்தான். கயிற்றின் உதவியால் அவர்கள் தாத்தாவை மரத்திலிருந்து இறக்கினார்கள்.

மறு நாள் ராமு வீட்டிலும் டமாரத்தை அடித்தான். அவனுடைய அம்மாவோ, தாத்தாவோ அவனை ஒன்றுமே சொல்லவில்லை.

# இன்பக் குழவி

முடியரசன்

திருமணம் என்ற தேன்மொழி என்றன்
செவியில் வார்த்தான் சிறிய தம்பி;
அவர்தான் எத்துணை அழகோ! என்னை
அணைத்தணைத் தின்பம் அருந்துவர்! பின்னர்
எழிலுறு மழலை இன்பக் குழவி
என்கைத் தருவார் இன்பம்! இன்பம்!
என்மனக் குதிரை ஏறிச் சென்றேன்.

ஃ ஃ ஃ ஃ

'கண்ணே!' என்றார் கடிதினில் திரும்ப
அவரே நின்றார்! 'அத்தான்!' என்றேன்:
இன்பச் சூட்டால் இறுக அணைத்தார்
இதழைக் கொய்தார் எடுத்துச் சொல்ல
இயலா நிலையில் இருந்த என்னைத்
தெரியா உலகம் தெரியச் செய்தார்
அடடா இன்ப ஆற்றினில் மிதந்தோம்
கரையே இல்லை; காதல்! காதல்!

ஃ ஃ ஃ ஃ

அணைப்பால் மட்டும் ஆறுதல் இல்லை
துணைவர் தந்த தோள்தோய் இன்பச்
சின்னம் இல்லை; செருநரும் விழையும்
செயிர்தீர் செல்வன் சிந்தும் சிரிப்பை
அள்ளிப் பருக அவாவிற் றுள்ளம்!
இளம்உடல் தீண்ட இன்சொற் கேட்கத்
துடிதுடித் திருந்தேன்; துணைவரும் நானும்
"புண்ணியத் தலங்கள் புக்குநீர் மூழ்கியும்

புண்ணியம் இல்லை; புதல்வர் பேறினி
உண்டோ?" என்றேம், உள்ளூர்க் கணியர்
ஏடுகள் புரட்டி "இல்லை" என்றூர்;
இடிந்ததென் உள்ளம் இருண்டதென் வாழ்வு
மகப்பே றில்லா மலடோ அந்தோ!
எனச்சின் னுட்கள் ஏங்கி யிருந்தேன்.

ஃ ஃ ஃ ஃ

ஒளியைத் தரவோ இழிவைப் பெறவோ
அண்டை வீட்டார் அழகிய இளைஞர்
ஓரக் கண்ணுல் ஒப்புதல் கேட்டார்
தப்பென் றறிந்தும் தாய்மைப் பாசம்
ஒப்புதல் தந்தது அப்புறம் என்ன?
மற்றவன் வயலில் மாடுகள் மேய்ந்தன!

ஃ ஃ ஃ ஃ

ஊரார் அறிந்தால் ஒழுக்கம் இல்லா
உலுத்தை என்றே உளறிக் கொட்டுவர்
கொண்டவன் கண்டால் தண்டனை என்பான்
உற்றூர் எனிஞே பற்பல கதைப்பர்
எனினும் இந்த இன்பக் குழவி
"அம்மா" என்றே அழைத்திடும் என்னை
இம்மா நிலத்தில் எண்ணிய இன்பம்
பெற்றேன்! பெற்றேன்! பிறருரை வீணே!



பிரஞ்சு ஆசிரியர் மாப்பஸான் எழுதிய சிறந்த கதைகளில் ஒன்று.

# சிமோனின் தகப்பன்

தமிழாக்கம் : வாணிதாசன்

மணி அடித்தது. பள்ளிச் சிறுவர்கள் மிக விரைவாக ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு வெளியேவந்தனர். கட்டவிழ்த்துவிடப்பட்ட கன்றுக்குட்டிகள் துள்ளிக் குதிப்பதைப் பார்த்திருப்போம். ஆனல், இந்தப் பள்ளிச் சிறுவர்கள் அவற்றைவிட ஒருபடி மிஞ்சி விட்டனர். அடடா! என்ன குறும்பு! என்ன பேச்சு! வகுப்பில் இவர்கள் எப்படி அடங்கி இருந்தனர் என்றுகூட எண்ணத் தோன்றும் நமக்கு.

வழக்கம்போலப் பகல் உணவிற்கு வீட்டை நோக்கிப் பறக்க வேண்டிய அவர்கள், ஏதோ பெரிய காரியத்தைச் சாதிக்கக் கூடிய கூட்டம் போலப் பள்ளிக்குச் சற்றுத் தொலைவில் கும்பலாகக் கூடிவிட்டனர். என்றுமில்லாது இப்படி இன்று அவர்கள் கூட்டமாக நிற்பதற்கும், குசுகுசுவென்று பேசுவதற்கும், பள்ளிக்கூட வாயிலை நோக்கிக் கொண்டிருப்பதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

சிமோன் அன்றுதான் புதிதாகப் பாடசாலைக்கு வந்தான். அவன் பள்ளி வகுப்பைவிட்டுப் பள்ளிக்கூட வாயிற்படியண்டை வருவதைக் கண்டவுடன் அணிவகுத்து நின்றிருந்த அந்தச் சிறுவர்கள் ஒரே கூச்சலிட்டனர். அருகிலிருந்த மாடி வீட்டின் பெருஞ்சுவர் அவர்கள் கூச்சலை எதிரொலித்தது.

அவன் தாயைப்பற்றி அவ்வூரிலுள்ள பெண்கள் ஏதேதோ பேசுவது வழக்கம். ஆனல், அவளை நேரில் காணும்போது மட்டும் சற்று மரியாதையோடே நடந்து வந்தனர்.

இது பெண்ணினத்திற்கே இயற்கையாக அமைந்த பண்பு—அவர்களோடு தொன்றுதொட்டுத் தொடர்ந்து வருகின்ற பழக்கம். 'எல்லோருமா' என்று பெண்ணினம் சீறலாம். "பெரும் பகுதி'' என்று அவர்கள் உள்ளமே அவர்கட்குப் பதில் கூறும். நாம் கூறவேண்டியதில்லை. நேரில் இல்லாதபோது நீட்டி நெளித்துக் கூட்டிக் குறைத்துப் பேசுவார்கள். கண்முன் கண்டுவிட்டாலோ அப்பப்பா! அவர்கள் காட்டுகின்ற அன்பு—அழகிய பேச்சு!......தனியாக ஒரு தொகுப்பு நூலாக்கலாம்.

சிறுவர்களுக்கு எதற்காகத் தங்கள் தாய்மார்கள் அவளை இப்படியெல்லாம் தூற்றுகிறார்கள் என்பது தெரியாது. ஆனல், தங்கள் தாய்மார்கள் அவளைப் பற்றிப் பேசுவதைக் கேட்டு

அவர்களும் அவனைக் கிள்ளுக்கீரையாக நினைத்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர்.

சிமோனுக்கு இவையெல்லாம் தெரியாது. தன் வீடு உண்டு, தாயுண்டு என்று இருந்தானே ஒழிய, மற்றவர்களைப் போலத் தெருவிலோ, தோப்பிலோ, ஆற்றங்கரையிலோ சேர்ந்து சென்று விளையாடியதே இல்லை. விளையாட நினைத்திருக்கலாம். ஆனால், அவன் தாய் அவனை அப்படி விட்டு வைக்கவில்லை. கூண்டுக் கிளியைப்போல அவனைத் தன் குடிசையிலேயே அடைத்து வைத்திருந்தாள் அவள்.

சிமோனின் தலையைக் கண்டார்களோ என்னவோ, பள்ளிக்குச் சற்றுத் தொலைவிலே நின்றிருந்த மாணவர்கள் அவனைப் பரிவோடு பார்ப்பது போலப் பாசாங்கு செய்தனர். உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டனர். ஒருவரை யொருவர் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டனர். அவர்களிலே ஒருவனுக்கு வயது பதினைந்து இருக்கும். அவன் மற்றவர்களைப் பார்த்து "சிமோனைத் தெரியுமா உங்களுக்கு? தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று சற்றுக் குரலை உயர்த்திக் கூறினான். அவன் கூறுகின்ற அந்தச் சொற்றொடர், அந்தப் பட்டம் சிமோனின் காதுக்குக் கேட்கவேண்டும் என்பது அவன் நோக்கம்.

மற்ற சிறுவர்களும் ஒருவர் மாற்றி ஒருவர், "சிமோன் தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று கூறிக் கூறிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சிமோன் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே தன் வீடு நோக்கித் திரும்பினான்.

சற்றுத் தொலைவில் குறும்புக் கண்களோடு தன்னை நோக்கும் மாணவர்களை, ஏதோ குத்தலாகப் பேசிக் குறும்பு செய்யக் கூட்டமாக நின்றிருக்கும் அந்தக் கொடிய விலங்குகளைக் கவனிக்காது வீடு நோக்கிப் புறப்பட்டான் சிமோன்.

வீடுபோக விடுவார்களா அவர்கள்? முன்கூட்டியே திட்டமிட்டிருந்த அந்த முரட்டு மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து அவனைச் சூழ்ந்து கொண்டனர். வேலியைப் போல அவனை வளைத்துக் கொண்டனர்.

அவர்களுக்கிடையே மரம் போல அவன் அசையாது நின்றிருந்தான். எதற்காகத் தன்னை இப்படி வளைத்துக் கொண்டார்கள் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

அவர்களில் ஒருவன் - வகுப்பிற்குச் சிமோனைப்பற்றிய தகவலைக் கொண்டுவந்தவன்-ஏதோ வெற்றியைக் கண்டவன் போல, "உன் பேரென்ன?" என்றான்.

"சிமோன்" என்றான் சிறுவன்.

மற்றொருவன், "என்ன... சிமோனோ?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான். அந்தச் சிரிப்பில் குறும்பு நிறைந்திருந்தது.

அட்டைப்படக் கதை

"ஆம்; சிமோன்—சிமோன் தான் என் பெயர்" என்று சற்றுத் தடுமாறிக் கொண்டே கூறினுன் சிறுவன்.

கூட்டத்திலே இருந்த மாணவன், "அவன் பெயர் சிமோன்... சிமோன் மாத்திரமல்லடா... வேறு சிலதும் கூட...பேரைப் பாரு பேரை" என்று கூச்சலிட்டான்.

சிறுவன் கண்களிலே நீர் நிரம்பிற்று. மூன்றும் முறையாக என் பெயர் "சிமோன்" என்று சற்று அழுகை கலந்த குரலிலே கூறினுன். அவன் குரலிலே அழுத்தமும் திருத்தமும் எதிரொலித்தன.

கூடி இருந்த சிறுவர்கள் கைதட்டிச் சிரித்தனர். குரலை உயர்த்தி "பார்த்தீர்களா? அவனுக்குத் தகப்பன் பெயர் கிடையாது. தகப்பன் பெயர் தெரியாதவன். தகப்பன் இருந்தால் நம்மைப்போலப்பெயரோடு தகப்பன் பெயருமல்லவா இருக்க வேண்டும். இவன் அனுமத்து... யாருக்குப் பிறந்தவன் என்று கூடத் தெரியாதவன்" என்று கூச்சலிட்டனர்.

"சிமோன் தகப்பன் பெயர் தெரியாதவன்", "சிமோன் தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று ஒவ்வொரு மாணவர் வாயிலும் இச்சொற்றெடர் படாதபாடு பட்டது.

"தகப்பன் பெயர் இல்லாத பையன்" இது அவர்களுக்குப் புதுமையாக இருந்தது. புதுமையாக மட்டுமல்ல—கொடுமையாகத் தங்களோடு ஒப்ப ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருளைப்போல, அபூர்வப் பிறவியைப் போல, அவனை வெறிக்கப் பார்த்தார்கள் அவர்கள். அவர்களையும் அறியாது அச்சிறுவன் மேல் வெறுப்பு வளர்ந்தது. தங்கள் தாய்மார்களுக்கு அவன் தாய்மேல் வெறுப்பு வளர்ந்து, தழைத்து மரமாகிக் காய்த்துப் பழுத்துக் குலுங்கு வதைப் போல அவர்களுக்கும் அவன்மேல் வெறுப்பு வளர்ந்தது.

சிமோனுக்கு நிற்க முடியவில்லை. தலைசுற்றுவதைப் போலத் தோன்றியது. அருகில் இருந்த மரத்தைப் பிடித்துக்கொண்டு சற்று அதன்மேல் சாய்ந்தான். நீங்காத இந்தப் பழியை நினைக்கும்போது அவன் நெஞ்சு வெடித்துவிடும்போல் தோன்றியது. அவர்கள் வாயை எப்படி அடக்குவது என்று அவன் அறிவு மனத்தைவிட விரைவாக ஆராயத் தொடங்கியது. அவனால் அவர்கள் செய்கின்ற குறும்பைப் பொறுக்க முடியவில்லை. "எனக்கு அப்பா இருக்கிறுர்" என்று உரத்துக் கூவினுன் அவன்.

"எங்கே?" என்று கேட்டார்கள் மாணவர்கள்.

சிமோனுக்குப் பதில் கூற முடியவில்லை. உண்மையிலேயே "அவன் தந்தை யார்? எங்கே இருக்கிறுர்?" என்பதுதெரியாது. தன் தாயோடு இதுவரையில் இருந்தானே ஒழியத்தந்தையைப் பார்த்ததாகவோ, அல்லது தங்

தையைப் பற்றித் தன் தாய் பேசியதாகவோ அவனுக்கு நினைவு வரவில்லை.

மீண்டும் ஒரே கூச்சல்! ஒரே கைதட்டு! சிற்றூர்ச் சிறுவர்கள், வயற்காட்டு விலங்குகள் அடிபட்ட பெட்டைக் கோழியை மீண்டும் கொல்ல நினைப்பதைப் போலத் "தகப்பன் பெயர் தெரியாதவன்", "தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று கூச்சலிட்டனர். அவர்கள் வாய் ஓய்ந்தபாடில்லை.

அவர்களிலே தன் பக்கத்து வீட்டுப் பையனைச் சிமோன் கண்டுவிட்டான். சிமோன் அவனை அடிக்கடி பார்த்திருக்கிறான். அவனும் தன்னைப்போல அவன் தாயோடு தனியாகத் தானே இருக்கிறான்! இவனும் நம்மைப்போலத் தகப்பன் இல்லாமல்தானே இருக்கிறான் என்று நினைத்தான். அவனைச் சுட்டிக்காட்டி, "இவனுக்குக் கூடத்தான் தகப்பன் இல்லை" என்று கண்ணைக் கசக்கிக் கொண்டே கூறினான்.

"எனக்கா? உண்டு தம்பி, உண்டு." தலையை அசைத்துக் கொண்டே சற்றுக் கிறுக்கோடு இப்படிப் பதில் கூறினான் அண்டை வீட்டுச் சிறுவன்.

"எங்கே, இருக்கிறார்?" சற்று கோபமாகக்கேட்டான் சிமோன். அவன் பொய் சொல்லுகிறான் என்று நினைத்தது அவன் சிறு உள்ளம்.

"எங்கேயா — அவர் இறந்து விட்டார். கல்லறையில் அடக்கம் செய்திருக்கிறோம்" என்று பளிச்சென்று அறைவதைப் போலப் பதில் தந்தான் அண்டை வீட்டுச் சிறுவன்.

அவன் கூறியதை ஏற்றுக் கொள்ளும் முறையில் அம் மாணவக் கூட்டத்திலிருந்து "ஆம்" என்ற கூச்சல் எழுந்து ஒவ்வொரு சுவரிலும் எதிரொலித்து மறைந்தது. இறந்த அவன் தகப்பன் அவர்களை வளர்த்துச் சாட்சிக்கு அனுப்பியதைப் போல அவர்கள் "ஆம்" என்று கூச்சலிட்டனர். தகப்பன் இல்லாத சிமோனை நசுக்குவதற்காகவே கல்லறையிலிருந்து வெளிவந்தவர்களைப் போலக் காட்சியளித்தனர் அந்த மாணவர்கள். அவர்கள் குரல் வானைக் கிழித்தது.

அவர்கள் தந்தைகளில் பெரும்பாலோர் குடியர்கள், திருடர்கள், மனைவியோடு மல்லுக்கு நிற்பவர்கள், தங்கள் மனைவிகள் தங்களிடம் ஒழுங்கோடு இல்லறம் நடத்துவதாக மனப்பால் குடிப்பவர்கள்! அவர்கள் பெயரைத் தாங்கி நிற்கும் பிள்ளைகள், அவர்கட்குத்தான் பிறந்ததாக எண்ணிக்கொண்டிருக்கும் அப்பாவிகள்!

இவ்வளவு சிறந்த தந்தைகளுக்குப் பிறந்த பிள்ளைகளிலே ஒருவன், "தகப்பன் பெயர் தெரியாதவன், தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று சிமோனின் முகத்தைப் பார்த்துப் பார்த்து இளித்துக் காட்டிக் கூறினான்.

எவ்வளவு நேரம் பொறுக்க முடியும்! பொறுமை பயங்கர

மானது! பொறுத்துக் கொண்டிருக்கிறனே என்று நாம் எண்ணும்போதே அவன் சிறுத்தையாக மாறுகிறான். பொறுமைக்கு இதுதான் எல்லை என்று கூறமுடியாது; பொறுமை வெடிகுண்டைப் போன்றது.

சிமோனும் அப்படித்தான் பொறுமை இழந்தான். சிறுத்தைக்குட்டியைப் போல அச்சிறுவன் மேல் பாய்ந்தான். அவன் தலைமயிரைப் பிடித்திழுத்துக் காலாலும் கையாலும் அவனைப் புடைத்தான்.

எதிர்பாராமல் கிடைத்த உதைகளைச் சட்டை செய்யாது அந்த முரட்டுப் பையன் சிமோனை நாய்போல் வீழ்ந்து கடித்தான்.

அங்குக் கூடியிருந்த மாணவர்கள் இருவரையும் விலக்கி விட்டனர். விலக்கி விட்டனர் என்றாலும் அவர்கள் இருவரும் மீண்டும் சண்டையிட வேண்டும் என்பதுதான் அவர்கள் விருப்பம்.

மீண்டும் போர் தொடங்கியது. சிமோன் தரையிலே உருட்டப்பட்டான். அவன் ஆடை கிழிந்து அலங்கோலமாகக் கிடந்தது. உடலெல்லாம் சிறுசிறு காயம், முகமெல்லாம் கீறல். பாவம், சிறியவன் சிமோன். என்ன செய்வான்? எழுந்திருக்க முடியாத நிலையில் தரையில் கிடந்தான் அவன்.

சுற்றியிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மாணவர்கள் கைதட்டிக் களிப்பைக் காட்டினர். சிமோனை அடித்துத் தரையில் வீழ்த்திய அந்த அண்டை வீட்டுப் பையன் வெற்றி வீரனைப் போல மற்ற மாணவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான். மீண்டும் கைதட்டல் பலமாக இருந்தது. அண்டை வீட்டுப் பையனுக்கு வாழ்த்தொலி செப்பினர் அன்பு மாணவர்கள்.

வெட்கமும், வேதனையும் பிடுங்கித் தின்ன மெல்ல எழுந்தான் சிமோன். தன் கிழிந்த ஆடையில் ஒட்டிக்கொண்டிருந்த புழுதியை, முகத்திலும் கையிலும் ஒட்டிக்கொண்டிருந்த தெரு மண்ணைத் துடைத்துக்கொண்டு மெல்ல நடந்தான். முழங்காலில் சிறிது காயம். அதைப் பார்த்துக் கொண்டே பேசாது தள்ளாடித் தள்ளாடித் தன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

"உன் அப்பாவிடம் போய்ச் சொல்"—அங்கே சூழ்ந்திருந்த மாணவர்கள் இப்படிக் கூச்சலிட்டனர்.

அவர்கள் கூறிய "உன் அப்பாவிடம் போய்ச் சொல்" என்ற சொற்றொடர் ஏதோ இடிந்து தலையில் விழுந்ததைப் போல் தோன்றியது அவனுக்கு. அவர்கள் கூறியதில் உண்மை இருக்கிறது என்பதை நினைக்கும்போதுதான் அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. யாரிடம் கூறுவது? அப்பா எங்கே இருக்கிறார்? இந்தக் கேள்விகளுக்கு அவனால் விடை காண முடியாதபோதுதான் அவனை விட வயதிலும் உடலிலும் மூத்த அந்த முரட்டு மாணவர்களுக்குப் பதில் கூற அவன் நா எழவில்லை. தன்

தொண்டையை அடைத்து அடைத்து வெளிவரச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் அழுகையை அடக்கிப் பார்த்தான். முடியவில்லை. சற்று நேரம் தேம்பினான். ஏதோ எண்ணினான். ஓவென்று அலறினான். அவனால் அழுகையை அடக்கமுடியவில்லை.



'சிறுத்தைக்குட்டியைப் போல அச்சிறுவன் மேல் பாய்ந்தான்'

அங்கு கூடியிருந்த மாணவர்களுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி. மிருகத்தனமான மகிழ்ச்சி. வெற்றி கண்ட விலங்குகளைப் போல அவனை வெறித்து வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். அதோடுமட்டுமல்ல. அவன் கையைப் பிடித்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்து “தகப்பன் பெயர் தெரியாதவன்”...“தகப்பன் பெயர் தெரியாதவன்”......என்று ஒருவன் பாட மற்றவர்கள் பின் பாட்டுப் பாடினர். சிலர் அக்கூத்துக்கும் பாட்டிற்கும் ஏற்பக் கையைத் தட்டி உடலை நெளித்து ஆடினர்.

வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதைப் போன்ற இக் கூத்தும் பாட்டும் அவன் அழுகையை நிறுத்திவிட்டன என்று எண்ணினார்களே ஒழிய, அவன் சின வெறியைத் தூண்டிக் கொழுந்து விட்டெரியச் செய்தன என்பதை அந்த மாணவர்கள் உணரவில்லை.

மீண்டும் அவனை இழுத்துப் பாடி ஆடத் தொடங்கினர்.

கீழே குனிந்தான் சிமோன். கற்கள் கிடைத்தன. எடுத்தான். தன் வலிவு கொண்ட மட்டில் அவனைச் சூழ்ந்த அந்தச்சிறுவர்களை நோக்கி வீசினான். ஒருவனுக்கு மண்டையில் அடி. இருவருக்க, இடுப்பில் அடி. கூச்சலிட்டுக்கொண்டே பறந்தோடும் கோழிக் குஞ்சுகள் போல அந்தக் குறும்பு மாணவர்கள் தப்பியோடினார்கள்.

மக்களே இப்படித்தான். ஏமாந்திருக்கும் வரையில் ஏய்ப்பார்கள், ஏமாந்தவன் பொறுத்துப் பொறுத்து எழுச்சியடையும்போது ஏய்த்து வந்த கூட்டம் ஓட்டம் பிடிக்கும். அந்தக் கூட்டத்தைப் புறமுதுகிட்டோடச் செய்வதற்கு ஒருவன் போதும். ஒருவனும் சற்று உணர்ச்சி மேலீட்டால் வெறியனாக மாறவேண்டும். அவ்வளவுதான். அத்தனை மக்களும் அதற்கு முன் வாய்வீச்சில் வல்லவர்களாக இருந்தவர்கள் அவன் முன் தலை காட்டமாட்டார்கள். அதைப் போலச் சிமோனைச் சூழ்ந்து தொந்தரை செய்த

மாணவர்கள் தலைகால் தெரியாது ஓடத் தொடங்கினார்கள்.

சிமோன் தனித்து நின்றான். அவன் சிந்தனையில் ஒரே ஒரு எண்ணம் தோன்றியது. வயலை நோக்கி ஓடினான் அவன். ஏதோ முடிவுக்கு வந்தவனைப் போல வயலருகில் கல்லிடுக்கில் பாய்ந்து சலசலக்கும் ஆற்றுக்கருகில் நின்றான். ஆற்றிலேவிழுந்து ஆவியைப் போக்கிக்கொள்வதென்ற முடிவுக்கு வந்தான் அவன்.

கடந்த வாரத்தில் ஒரு பிச்சைக்காரன் ஆற்றிலே விழுந்து உயிரைப் போக்கிக்கொண்டது அவனுக்குத் தெரியும். அவன் பிணத்தை இழுத்து ஆற்றங்கரையில் போட்டிருந்ததை அவன் பார்த்திருக்கிறான். அவனுக்கு யாருமில்லை, பணமும் இல்லை, பற்றுமில்லை என்று பலர் பேசியதையும் அவன் கேட்டிருக்கிறான். குழி விழுந்த கண்கள், குளிர்மையிழந்த முகம், அழுக்கடைந்த ஆடை, நீண்ட தாடி, ஒட்டிய வயிறு. இந்த நிலையில் ஆதரவற்று அல்லல் பட்ட அந்தப் பிச்சைக்காரன் ஆற்றிலே விழுந்து உயிர்விட்டான்.

'இப்பொழுதுதான் அவன் நிம்மதியடைந்தான்' என்று சிலர் அந்தப் பிச்சைக்காரனுக்கு இரக்கங்காட்டிப் பேசியதைச் சிமோன் கேட்டதுண்டு.

சிமோனும் அவனைப்போல இறக்கத் துணிந்துவிட்டான். பணமின்றிப் பிச்சைக்காரன் இறந்து நிம்மதியடைந்தான். தகப்பன் இல்லாத நாம் இறந்து நிம்மதியடைவோம் என்ற முடிவுக்கு வந்தான் அவன். அந்தக் குறும்பு மாணவர்களைவிட, அந்தத் "தகப்பன் பெயர் தெரியாதவன்" என்ற சொல்லைவிடச் சாவே மேலானதாக அவனுக்குப்பட்டது. ஆற்றிலே விழுந்து உயிர்விடுவது இன்பமாகத் தோன்றியது.

ஆற்றுத் தண்ணீர் தெளிந்து படிந்து வெள்ளி உருவெடுத்து ஓடுவதைப் போல ஓடிக்கொண்டிருந்தது. அதை அவன் நீண்ட நேரம் பார்த்தான். அவனையறியாமலே அவன் அழுகை நின்றது. சிறுசிறு சேல்கள் அங்கும் இங்கும் நீர்மட்டத்திற்குமேல் எழுந்து குதித்து விளையாடின. அவனுக்கு இன்பமாக இருந்தது அந்தக் காட்சி. நீண்டு வளர்ந்த கோரைகளை அந்த ஆற்று நீர் வளைத்து மடக்கி வம்புக்கிழுத்ததைப் பார்த்தபோது சிமோனுக்குச் சிரிப்பே வந்துவிட்டது. அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

ஒன்றிரண்டு கூழாங்கற்களை அந்த ஆறு தன்னோடு இழுத்துச் செல்வதைப் பார்த்தபோது மாணவ விலங்குகள் தனக்குச் செய்த கொடுமைகள் யாவும் தன் மனதைவிட்டு மறையத் தொடங்கின. ஆற்றிலே தன் கால்கள் இரண்டையும் தொங்கவிட்டு விளையாட நினைத்தான். தன் முழங்காலில் இருந்த காயம், இரத்தம் கசிந்து காய்ந்திருப்பதை அவன் கண்கள் கண்டன. அவனுக்கு அழுகை வந்தது. தேம்பினான். அவன் வாய் 'ஆற்றில் விழுந்து இறந்தால்தான்

நிம்மதி' என்று முணுமுணுத்தது. 'பணமற்ற பிச்சைக்காரன் இறந்து நிம்மதியடைந்ததைப் போல நான் நிம்மதியடைவேன்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

ஒரே வெய்யில்; சினம் மிகுந்தவர்கள் சிந்துகின்ற கடுஞ்சொற்களைப் போல, உச்சிச் சூரியன் ஒவ்வொரு உயிர்கள் மீதும் நெருப்புக் கதிர்களை நீட்டி வதைத்துக் கொண்டிருந்தான். ஆற்றில் குளித்து வருகின்ற காற்று அனல் வாடை வீசிற்று. மரம் மட்டைகள் அசையவில்லை. சற்று பருத்த உடம்புகள் வெய்யில் கொடுமை தாங்காது வெதும்புவதைப்போல ஆற்றோரத்தில் பூத்த தாமரை வாட்டத்தோடு தலையாட்டிக் கொண்டிருந்தது. ஆற்று நீர் கண்ணாடியைப் போல ஒவ்வொரு பொருளையும் தன்னில் அடக்கிக் காட்டிக் கொண்டிருந்தது.

சிமோன் இந்தக் கோடைக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனையறியாமலே அவன் கண்கள் நீரைச் சொட்டிக்கொண்டிருந்தன. நீண்ட பெருமூச்சுக்கிடையே அவன் உள்ளம் ஆற்றுப்பரப்பை அள்ளி அள்ளி உண்டுகொண்டிருந்தது. இவனுக்குத் தூக்கம் வருவதைப் போலத் தோன்றியது. ஆற்றோரத்தில் வளர்ந்து படிந்து நெளியும் கோரைப்புற்கள் அவன் தாயைப் போலத் தாலாட்ட முனைந்தன.

ஒரு சிறிய பச்சை நிறத் தவளை அவன் [illegible] துள்ளிப் பாய்ந்தது. ஒளிக் கற்களைப்போல் மேல் எழுந்து பிதுங்கிய கண்கள் சூரிய ஒளியில் பல நிறங்களைக் காட்டிக் காட்டிக் களிப்பூட்டின.

அவனையும் அறியாது அவன் கண்கள் தவளையைத் தொடர்ந்து பாய்ந்தன. ஆசை அரும்பிற்று. அதைப் பிடிக்க முனைந்தான் அவன். அது தத்தித் தத்தி அவனைத் தாண்டிப் பாய்ந்தது. அதை அவன் தொடர்ந்தான். அவனை ஏமாற்றிவிட்டு எட்டிப் பாய்ந்தது அந்தத் தவளை. புல்லோடு புல்லாக வேற்றுமை தெரியாத நிலையில் ஆற்றோரத்துச் சேற்றுப் பாசியில் பாய்ந்து மறைந்தது. அந்தத் தவளையைத் தேடிக் கண்டுபிடிக்க அவனுக்கு நீண்ட நேரம் ஆனது. ஆனாலும் அதை அவன் விடவில்லை. தொடர்ந்தான். மூன்று தடவை அந்தச் சிறு தவளை அவன் கைக்கு அகப்படுவதுபோலப் பாசாங்கு செய்து ஏமாற்றித் தாண்டிக் குதித்தது. அவன் கடைசியாக அதைப் பிடித்துவிட்டான். அதன் பின் கால்களைப் பிடித்துத் தூக்கி "என்னிடமா ஆட்டம் காட்டினாய்? ஊம்" என்று உறுமினான். அது தன்னை ஏய்க்கப் பார்த்து ஏமாந்ததை நினைக்கும்போது அவனை அறியாமலே சிரிப்பு வந்தது. மெல்லச் சிரித்துவிட்டான். அந்தத் தவளை தன் முன் கால்களை நீட்டி உடலை நெளித்து உப்பிய வயிற்றை முன்னுக்கும் பின்னுக்கும் தள்ளி விடுபட முயற்சித்ததைப் பார்த்தபோது,



17736

"ஓடப் பார்க்கிருயா—முடியாது தம்பி, முடியாது. இவரிடத்தில் அதுதான் முடியாது" என்று அவன் வாய் முணுமுணுத்தது. பிடித்துக் கொண்டிருந்த விரலெல்லாம் ஒரு வகை நீர்ப்பசை ஒட்ட அதன் கண்கள் பிதுங்குவதைக் கண்டபோது அவனுக்குச் சற்று அருவருப்பாகத்தான் இருந்தது. அது அவன் கையையும் பிராண்டி விடுபட முயற்சித்தது. அவனு விடுபவன்? ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்தவன் போலத் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான். இந்த விளையாட்டு அவனுக்கு மிக மிகப் பிடித்திருந்தது என்ருலும் அவனுக்கு அவன் அன்னையைப்பற்றிய நினைவு அடிக்கடி தோன்ருமலில்லை. அன்னையைப் பற்றி நினைக்குந்தோறும் அழுகையும் ஆத்திரமும் பீறிட்டன. அவன் வாய்விட்டுக் கதறினன். "தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று அந்த மாணவர்கள் கூறிய சொற்கள் அவன் காதிலே எதிரொலித்துக்கொண்டிருந்தன. அவர்கள் அங்கு இல்லாவிட்டாலும் அச்சொற்கள் அவனை ஊசி கொண்டு குத்துவது போன்ற உணர்ச்சியைத் தந்தன. அவனல் பொறுக்க முடியவில்லை. அவன் உறங்குவதற்கு முன் முணுமுணுக்கின்ற வேண்டுதலைச் செபிக்கத் தொடங்கினன். இது அவன் தாய் அவன் சிறுவனுக இருக்கும்போதே கற்றுக் கொடுத்தது. காலையிலும் மாலையிலும் இப்படிச் செபித்த பிறகே எதையும் செய்யத் தொடங்க வேண்டுமென்று கட்டளை இட்டிருந்தாள் அவன் தாய்.

ஆற்றிலே வீழ்வதற்கு முன் இந்தச் செபத்தைச் சொல்லிய பிறகே வீழ்வது என்ற முடிவுக்கு வந்தான். வேண்டுதலை முடிப்பதற்குள் "தகப்பன் பெயர் தெரியாதவன" என்ற அந்தச் சொற்கள் அவன் நினைவிலே எழுந்து எழுந்து கூத்தாடின; வேதனைப் படுத்தின. அவனுக்கு வேறெதுவும் நினைவிற்கு வரவில்லை. வேறெதுவும் அவனைச் சாந்தப்படுத்தவில்லை. அவன் அழுதுகொண்டே இருந்தான். அவன் தோளை வலிய கரங்கள் இரண்டு பற்றிக் குலுக்கிக் கொண்டிருந்ததைக் கூட அவனல் உணர்ந்து கொள்ள முடியவில்லை. நீண்ட நேரத்திற்குப பிறகே "என்னப்பா உனக்குக் கவலே?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அவன் முன்னே கருத்த உடலும் நீண்ட தாடியும் உடைய ஒரு தொழிலாளி நிற்பதைக் கண்டான். கண்களிலே நீர் வடிய, தொண்டையிலே வார்த்தைகள் அடைக்க, "என்னை அவர்கள்



கல்லிடுக்கில் பாய்ந்து சல சலக்கும் ஆற்றுக்கருகில் நின்ருன். பூ

அடித்து விட்டார்கள் ... ..."

"எனக்கு அப்பா இல்லையாம் ..."

"அப்பா இல்லாததால் என்னை அடித்து விட்டார்கள் ... ..." என்று அழுகை கலந்த குரலிலே பேசினான் சிறுவன்.

"என்ன! அப்பா இல்லையென்று அடித்துவிட்டார்கள்... ... ..."

"கழுதைகள் ......" "அப்பா ஒவ்வொருவருக்கும் உண்டே" என்று பரிவும் சிரிப்பும் கலந்த குரலில் கூறினான் அந்தத் தொழிலாளி.

சிறுவன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். "எனக்குத் தகப்பன் இல்லை... தகப்பன் இல்லை" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

தொழிலாளிக்கு யாவும் விளங்கிவிட்டது. சிமோனின் தாயைப்பற்றி அதற்கு முன் அவ்வூர்ச்சீமாட்டிகள் பேசியதை அவன் கேட்டிருக்கிறான். இப்பொழுது யாவும் அவனுக்கு விளங்கிவிட்டது. சிறுவனைத் தட்டிக் கொடுத்து "அழாதேடா கண்ணு, என்னோடு வா, வீட்டிற்குப் போவோம். நான் உன் தகப்பனைக் காட்டுகிறேன்" என்று அன்போடு கூறிச் சிறுவனை அவன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.



அவளை அறியாமலே அவள் செவ்வரி படர்ந்த கண்கள் நீரைச் சிந்தின

வழியில் அவனுக்குச் சிரிப்பூட்டுகின்றசெய்திகளைச் சொல்லிக்கொண்டே தன் சுண்டு விரலால் பையனின் விரலைக் கோர்த்துப் பிடித்தபடி அவன் வீட்டை நோக்கி அழைத்துக் கொண்டே வந்தான் தொழிலாளி. அவன் தாயை அதற்கு முன் பல தடவை அத்தொழிலாளி பார்த்திருக்கிறான். நல்ல அழகி. அச்சிற்றூரிலே அவளைப் போன்ற அழகி கிடையாது. அழகு மட்டுமல்ல. அடக்கம் ஒடுக்கம் உடைய பெண் அவள் என்பது அவன் முடிவு.

ஒரு சிறிய கூரை வீட்டின் முன் இருவரும் வந்து நின்றார்கள். அவ்வீடு பார்வைக்குச் சிறிதாக இருந்தாலும் தூய்மையாகவும் களையாகவும் இருந்தது.

"அம்மா" "அம்மா" என்று கூப்பிட்டான் சிமோன்.

ஒரு பெண் வெளியில் வந்தாள். இதுவரையில் சிறுவனோடு ஏதேதோ பேசிச் சிரித்து விளையாடிக்கொண்டுவந்த தொழிலாளி அந்தப் பெண்ணின் முகத்தைக் கண்டவுடன் பேச்சை நிறுத்திக் கொண்டான். சற்று மரியாதையோடே அந்தப் பெண்ணைக் கவனித்தான்.

அவளைப் பார்த்தவுடனே 'அவள் கண்டிப்பான பேர்வழி,

நல்லவள், அறிவுள்ளவள், ஒழுக்க முடையவள், முன்னர் ஒரு ஆணுல் ஏமாற்றப்பட்ட காரணத்தால் எந்த ஆடவனையும் தன் வாயிலில் வரவேற்கமாட்டாள்' என்ற முடிவுக்கு வந்தான்.

"இந்தாம்மா...... இச்சிறுவன் உன் மகன்தானே......ஆற்றிலே விழ இருந்தான்... அவனை மீட்டு வந்தேன்" என்று சிமோனை அவளிடம் ஒப்படைத்தான்.

சிமோன் அழுதுகொண்டே தன் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். "என்னை அந்த மாணவர்கள் எல்லாம் சேர்ந்து அடித்துவிட்டார்கள்" என்று கதறினன்.

"ஏண்டா கண்ணு, ஏன்? எதற்காக?" என்று துடிதுடித்துக் கேட்டாள் அவன் தாய். அவள் கைகள் சிவந்து நீர் சொட்டும் கண்களைத் துடைத்துக்கொண்டிருந்தன.

"எனக்குத் தகப்பன் இல்லையாம். தகப்பன் பெயர் தெரியாதவனும் நான். என்னை அடித்துவிட்டார்கள். அவர்கள் குறும்பையும், ஏசலையும் பொறுக்க முடியவில்லை, அம்மா. அதற்காக ஆற்றிலே விழுந்து இறந்துவிட நினைத்தேன்" என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே கூறினன் சிமோன்.

"தகப்பன் பெயர் தெரியாதவன்" என்ற அந்தச் சொற்கள் அவளை ஒரு குலுக்குக் குலுக்கின. அவள் சிவந்த கன்னத்தில் மீண்டும் செம்மை பாய்ந்தது. அவள் உயிரை வாட்டும் ஒருவகையான உணர்வு அவள் மெல்லுடலில் பாய்ந்து பரவி வாட்டியதை நின்றிருந்த தொழிலாளி உணர்ந்தான். அவன் கண்கள் இரண்டு சொட்டு நீரை வெளியிடமாட்டாது மறைத்தன. எப்படி விடை பெற்றுச் செல்வது என்பதே அவனுக்குப் புரியவில்லை. சிந்தித்துக்கொண்டிருந்தான்.

சிமோன் தன் தாயை விட்டு அவனருகில் ஓடிவந்தான். "நீ என் அப்பாவாக இருக்கிறுயா?" என்று கெஞ்சினன்.

அந்தத் தொழிலாளியோ பேசவில்லை. அப்பாவாக இருப்பது அவ்வளவு சுலபமானதா!

தன் மகனின் நிலையை, அவனுக்கு ஏற்பட்ட பழியை நினைக்கும்போது அவள் இதயமே வெடித்துவிடும்போல் தோன்றியது. வெட்கக் கேடான தன் நிலையை எண்ணி எண்ணி ஏங்கினள். அவளால் நிற்க முடியவில்லை. இதயத்தை இரண்டு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டு சுவரிலே சாய்ந்தாள். அவளை அறியாமலே அவள் செவ்வரி படர்ந்த கண்கள் நீரைச் சிந்தின. இடையிடையே மார்பு விம்மிப் பெருமூச்செறிந்து கொண்டிருந்தாள் அந்த இளங்கொடி. அடி பட்டுத் தத்தளிக்கும் மானைப் போல இருந்தது அவள் நிலை.

ஒன்றும் பேசாது இச்சோக நாடகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கும் தொழிலாளியை நெருங்கினன் சிமோன். வேதனை நிறைந்த குரலோடு "நீ என் தந்தையாக இருக்கிறுயா,

அல்லது நான் ஆற்றிலே விழுந்து இறந்துவிடட்டுமா? அந்த மாண வர்கள் வீசுங் கடுஞ் சொற்களை என்னல் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை" என்ருன்.

சிறுவனைச் சந்தோஷப்படுத்த வேண்டும். வேறு வழியில்லை. "சரி ஆகட்டும் நான் உன் தந்தை யாகவே இருக்கிறேன்" என்று வேடிக்கையாகக் கூறினன் தொழி லாளி.

"சரி அப்படியானல் உன் பெய ரென்ன? அவர்கள் — அந்த விலங்கு போன்ற மாணவர்கள் கேட்கிருர்களே, அவர்களுக்கு என் பெயரோடு உன் பெயரைச் சேர்த்துச் சொல்லவேண்டும். உன் பெயரென்ன? ஊம். உன் பெயரென்ன சொல்லு" என் ருன் சிறுவன்.

"பிலீப்" என்ருன் தொழி லாளி. அவன் குரலில் தயக்க மும் கலக்கமும் தோன்றின.

"பிலீப்..., பிலீப்" என்று இரண்டு மூன்று தடவை மனப் பாடம் செய்து கொண்டான் சிமோன். "பிலீப், நீ என் அப்பா" என்று சந்தோஷத் தோடு கூவினன். அவன் கழுத் தைத் தாவிக் கட்டிக்கொண் டான். முத்தமிட்டான். அவன் பேச்சிலும் செயலும் கலந்தி ருந்த பாச உணர்ச்சியைச் சொல்லமுடியாது. குருடனுக் குக் கிடைத்த பார்வையைப் போல, கொடிக்குக் கிடைத்த கொம்பைப்போலச் சிமோனுக்கு அந்தத் தொழிலாளி கிடைத் தான். அவன் கையைப் பிடித் திழுத்து முத்தமிட்டான். மகிழ்ச்சி அவன் கண்களிடையே பொங்கி வழிந்துகொண்டிருந் தது. 'பிலீப் என் அப்பா' — 'பிலீப் என் அப்பா' இப்படி அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. அவன் முகம் காலை வானத்தைப்போலக் களை பெறத் தொடங்கியது.

தொழிலாளி அவனை இரு கையாலும் வாரியணைத்து உய ரத் தூக்கி முத்தமிட்டான்; "சரி கண்ணே அழாதே, இரு, நான் சென்று வருகிறேன்" என்று சொல்லி விரைவாக மறைந்து விட்டான்.

மறுநாள் சிமோன் பாட சாலைக்குப் போனன். மாணவர் கள் குறும்புச் சிரிப்புச் சிரித்து வரவேற்றனர். பாடசாலை முடிந்து வரும்போது முன்னுள் போன்றே முனகல் தொடங்கி யது. இம்முறை மண்டையில் அடிப்பதைப் போலச் சிமோன் என் தந்தையின் பெயர் 'பிலீப்' என்ருன்.

மாணவர்கள் கைதட்டிச் சிரித் துக்கொண்டே, "அது யாரடா அது 'பிலீப்?' எங்கேடா தேடிப் பிடித்தாய் இந்தப் பிலீப்பை?" என்று கூச்சலிட்டனர்.

இம்முறை அவன் எதிர்த்துப் பதில்கூறவில்லை. நேற்றைய மாதிரி அவர்கள் கூடிக்கொண்டு தன்னை அடித்துத் துன்புறுத்து வார்கள் என்ற பயம் அவனுக்கு இருந்தது. ஆசிரியர் அவ்வழி வந்தார். அதனுல் ஒருவாறு தொந்தரவில்லாமல் அவன் வீட டைய முடிந்தது.



'கொடிக்குக் கிடைத்த கொம்பைப் போல'

மூன்றுமாத காலமாக அடிக்கடி பிலீப் சிமோன் வீட்டிற்கு வருவதும், சிறுவனைப் பார்ப்பதும், ஆறுதல் கூறுவதும், சிரிப்பதும் விளையாடுவதுமாக இருந்தான்.

அவன் தாய் ஏதாவது பின்னிக்கொண்டே இருப்பாள். அவளிடம் பேச வேண்டுமென்று துடியாய்த் துடிப்பான் பிலீப். ஆனால் அவள் கண்டிப்பாக இரண்டொரு வார்த்தைகளில் கச்சிதமாகப் பேச்சை முடித்துக்கொள்வாள். மற்ற பெண்களைப் போலச் சிரித்துக் குலுக்கி வலைவீசுகின்ற செயல் சிறிதும் அவளிடம் இல்லை. மரியாதையாகவே அவள் நடந்து வந்தாள்.

அவனுக்கு மட்டும் அவள் தன் மட்டில் அன்பும் மரியாதையும் காட்டுகிறாள் என்பது நாளாக நாளாகச் சிறிது புலப்பட்டது.

ஏமாந்தவர்கள் நல்லவர்களிடத்தில்கூட விழிப்போடு இருப்பார்கள். அதைப்போலத்தான் அவளும் அவனிடத்தில் சற்றுக் கண்டிப்பாகவும் விழிப்போடும் இருந்தாள்.

ஆனால் ஊர், வாயை மூடிக்கொண்டிருக்குமா? நல்லதைக் கெட்டதென்று சொல்லும்; கெட்டதை நல்லதென்று சொல்லும்; உண்மையைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் கருதும். அதற்கு யாதும் தலைமாறாகத்தான் தோன்றும். ஒவ்வொரு ஊரும் இப்படித்தான். ஊரைப்பற்றியல்ல, ஊரிலுள்ள மக்களுக்கு இது மாமூலான வழக்கம்.

அச் சிற்றூரும் குற்றமற்ற அவளையும் அத்தொழிலாளியையும் பற்றிய புதுப் புராணம் பாடத் தொடங்கியது. ஆனால் அவன் அதைச் சட்டை பண்ணவில்லை.

சிமோனுக்குப் பிலீப்பின்மேல் கட்டுக்கடங்கா ஆசை. அன்பும் பரிவும் எங்கிருக்கிறதோ அங்கு ஆசையும் பணிவும் அடைக்கலம் புகும். சிமோன் மாலையில் அவனோடு உலாவச் செல்வான். ஏதாவது பேசி வம்பளந்துகொண்டிருப்பான். பிலீப்பைப் பார்க்காவிட்டால் அன்றெல்லாம் ஏதோ பித்துப் பிடித்ததுமாதிரியிருக்கும். பிலீப்புக்கு மட்டுமென்ன, அவனுக்கும் அப்படித்தான்.

முன்போல அல்ல, சிமோன் இப்பொழுது சற்றுத் தோற்றப் பொலிவுடன் பள்ளிக்கூடம் போவான். மற்றவர்களிடம் பேச மாட்டான். முன்போலத் தந்தையில்லையே என்ற கவலை இல்லை. 'பிலீப் தன் உண்மையான தந்தை' என்பது அவன் எண்ணம். பாவம் சிறுவன். அவனுக்கு என்ன தெரியும்?

தகப்பன் பெயர் தெரியாதவன் என்று கிண்டல் செய்து



சண்டைக்கு நின்ருனே அந்தப் பையன் ஒருநாள் சிமோனைப் பார்த்து "போடா நீ பொய் சொல்கிருய். பிலீப் என்று சொன்னுயே அவன் உன் தகப் பன் அல்லவே" என்ருன்.

"ஏன்? எதற்காக?" என்று கேட்டான் சிமோன்.

"எதற்காகவா? அவன் உன் தகப்பனுக இருந்தால் உன் அம்மாவுக்குக் கணவனுகவல் லவா இருக்க வேண்டும். பொய் சொல்லுகிருயே. தகப்பன் பெயர் தெரியாதவன்" என்று மீண்டும் கிண்டல் செய்தான் அந்தப் பையன்.

சிமோனுக்கு மீண்டும் ஒரே குழப்பம். ஆயினும் "என் தந்தை பிலீப்" என்று சற்றுத் தடுமா றிக்கொண்டே கூறினுன்.

" இருக்கலாம்...ஆனுல்...... உண்மையாகவல்ல" என்று கண் சிமிட்டிக் கொண்டே சிரித்தான் அந்தப் பையன்.

சிமோன் சிந்தனையில் ஆழ்ந் தான். தலையைத் தொங்கவிட்டுக் கொண்டே பிலீப் வேலை செய் யும் கொல்லன் பட்டரை நோக்கி நடந்தான். பிலீப் தன் தந்தை யாக இருந்தால் தன்னேடு வீட் டில் இருக்க வேண்டும், உண்ண வேண்டும், உறங்க வேண்டும், தன் தாயோடு உரையாட வேண்டும் அல்லவா என்று விளக்க வினு எழுப்பியது அவன் உள்ளறிவு. சிமோனுக்கு எது உண்மை என்பது விளங்கவில்லை. சிந்தித்துக்கொண்டே கொல்லன் பட்டரையடைந்தான்.

உயர்ந்து படர்ந்த மரத்தின் கீழே கொல்லன் பட்டரை இருந் தது. பட்டரை எங்கும் ஒரே இருள். உலையினின்று எழும் நீண்ட தீச்சுடர் பணையையும் பணைக்கு முன்னே நின்று சுத்தி யால் காய்ந்த இரும்பை உரு வாக்கிக் கொண்டிருக்கும் ஐந்து கொல்லர்களையும் விளக்கிக் கொண்டிருந்தது. தசை முறுக் கேறிய அவன் கைகள் சுத்தி யால் பணையை ஓங்கி ஓங்கி அறைந்து ஓசை எழுப்பிக்கொண் டிருந்தன. சுத்திக்கும் பணைக் கும் இடையில் இரும்பின் மேல் பாய்கின்ற கண்ணும் சுத்தியடி யோடு தொடர்ந்து வருகின்ற கலை நினைவும் ஒன்றுக்கொன்று உறவாடின.

அந்த வேளையில்தான் சிமோன் பட்டரையினுள் நுழைந்தான். நுழைந்தவனைக் கொல்லர்கள் யாரும் கவனிக்கவில்லை. அவ ரவர்கள் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். நுழைந்த சிமோன் பிலீப்பின் மேலாடையை மெல்ல இழுத் தான்.

பிலீப் திரும்பிப் பார்த்தான். சிறுநகை அவன் உதட்டில் தவழ்ந்தது. சுத்தியைக் கீழே வைத்துவிட்டுச் சிறுவனைத் தூக்கி முத்தமிட்டான். வேலை செய்துகொண்டிருந்த மற்ற கொல்லர்களும் வேலையை அப் படியே நிறுத்திவிட்டுச் சிறு வனையும் பிலீப்பையும் குளிர்ந்த விழிகளோடு மாறி மாறிப் பார்த் துக்கொண்டிருந்தனர். சிமோ

னின் மெல்லிய குரல் அமைதியைக் குலைத்தது.

அந்தப் பையன் இப்பொழுதுதான் கூறினான். "நீ என் அப்பா அல்லவாமே... உண்மைதானா..." என்று கேட்டான் சிறுவன்.

"ஏன்? எதற்காக" என்று கேட்டான் பிலீப்.

"ஏன் என்றால்... நீ... என் அம்மாவுக்குக் கணவன் இல்லையாம்...... கணவனாக இருந்தால்தானே, நீ எனக்கு அப்பாவாக இருக்க முடியும்" என்று சிறிது லச்சைப் பட்டுக்கொண்டே கூறினான் சிறுவன்.

மற்றவர்கள் யாரும் இந்தப் பேச்சைக் கேட்டுச் சிரிக்கவில்லை. உலை மட்டும் தன் மெல்லிய தீச்சுடரைக் காட்டி உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டிருந்தது.

பிலீப் நின்றுகொண்டிருந்தான். பணையின்மேல் ஊன்றிய சுத்தியின் கைப்பிடியைத் தன் முரட்டுக் கைகள் இறுகப் பிடித்துத் தாங்க, நெற்றியை அக் கைப்பிடிகளின் மேல் ஊன்றி ஏதோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் அவனைக் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தனர்.

சிமோன் எதையோ எதிர் பார்ப்பவன் போல பிலீப்பையும் மற்ற கொல்லர்களையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகத்திலே கலக்கம் தோய்ந்திருந்தது.

"இருந்தபோதிலும் அந்தப் பெண் நல்லவள். சிறந்தவள். நாணயமானவள். குடும்பத்திற்கேற்ற சுடர் விளக்கு. ஏமாற்றப் பட்டுங்கூட எத்தனை அடக்கம். ஒடுக்கம்" என்று கொல்லர்களிலே ஒருவன் மற்றவர்கள் பிரதிநிதி போலக் கூறினான்.

"உண்மை! உண்மை!" என்றனர் மற்ற கொல்லர்கள்.

"அது அவளுடைய தவறா? மணப்பதாகக் கூறி எவனோ அவளை வஞ்சித்துப் பாழாக்கினான். அது அவளுடைய தவறல்லவே. இன்றைக்குக்கூட அவளைப் போல அழகியை, அடக்க ஒடுக்கமான பெண்ணை இந்த ஊரில் பார்க்க முடியாதே" என்று மீண்டும் அந்தக் கொல்லன் கூறினான்.

"உண்மை! உண்மை!" இது மற்ற கொல்லர்கள் தந்த நற்சாட்சிப் பத்திரம்.

"அதுமட்டுமல்ல இந்தப் பையனை வளர்ப்பதற்கு ஏழையான அவள், எவருமற்ற அவள் என்ன பாடு பட்டாள் தெரியுமா? கோயில் குளத்திற்குக் கூட அவள் போனதே கிடையாது. குறும்புக் கண்கள் ஏழை எளிய பெண்களை வேட்டையாடவே அங்கு வருகின்றன என்பது அவள் கண்ட முடிவாக இருக்கலாம். முடிவென்பதென்ன? உண்மையும்கூட அல்லவா அது! தன் கையைக் கொண்டு ஏதாவது வயல் வேலை செய்தே தன் மகனைக் காப்பாற்றி வருகிறாள். நல்ல குணவதி" என்று தன் பேச்சை முடித்தான் கொல்லன்.

"உண்மை! உண்மை!" என்றனர் பின்பாட்டைப் போல மற்றவர்கள்.



பட்டரைத் துருத்தி ஊதத் தொடங்கியது. இதுவரை அமைதியாக இருந்த உலை செந்நாவை நீட்டி எட்டி எட்டிப் பார்க்கத் தொடங்கியது.

பிலீப் சிறுவனை வாரியணைத்தான். "மாலை வந்து உன் அம்மாவிடம் கலந்து பேசுகிறேன். போய் வாடா கண்ணு" என்று பரிவோடு கூறிக் கன்னத்தைத் தட்டி உடலைத் தடவிக் கொடுத்து முத்தமிட்டு அனுப்பினான்.

பட்டரையில் வேலை மீண்டும் தொடங்கியது. பணையில் அந்த ஐந்து சுத்திகளும் ஒன்றன் பின் ஒன்றாக விழுந்துகொண்டே இருந்தன. கலியாணப் பூசைக்கு அடிக்கப்படும் மாதா கோவில் மணியோசையைப் போல அந்த இரவு வரையில் சுத்திகள் பணையில் இன்ப ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தன.

பிலீப் பட்டரையை விட்டு நேரே சிமோன் வீட்டிற்குத் திரும்பினான். இருட்டிவிட்டது. வானமெங்கும் உடுக்கள் இங்கும் அங்குமாக வாரி இறைக்கப்பட்ட வயிரமணிகள்போலக் கண் சிமிட்டிக்கொண்டிருந்தன. ஒன்று இரண்டு விண்மீன்கள் ஒளி வீசுவதைப் போல அவன் உள்ளத்தில் சிறிது மகிழ்ச்சி ஒளி வீசத் தொடங்கியது. அவன் வீட்டை நெருங்க நெருங்க நிலவு தோன்று முன் இருள் மறையத் தொடங்கும் வானம் போல அவன் முகம் பொலிவு பெறத் தொடங்கியது.

அவள் வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருந்தாள். "இப்படி இருட்டிய பிறகு தாங்கள் இங்கு வருவது ஏற்றதல்ல" என்று சிறிது கண்டிப்பாகவே கூறினாள் அவள்.

பிலீப் ஏதோ பதில் கூற நினைத்தான். அவனுக்குச் சொற்கள் கிடைக்கவில்லை.

"என்னைப்பற்றி மற்றவர்கள் ஏதாவது பேசுவதற்கு இடங் கொடுக்கக் கூடாதல்லவா? அதற்காகத்தான் கூறுகிறேன்" என்று சற்றுச் சமாதானமும் விளக்கமும் தந்தாள் அவள்.

உண்மைதானே! ஊரில் இருப்பவர்கள் தங்களைப்பற்றித் தங்கள் வீட்டைப்பற்றித் தங்கள் வீட்டிற்கருகில் வேலிக்கிடையில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவர்கள், தெரிந்துகொண்டாலும் உத்தமர்கள் போல நடிப்பவர்கள் மற்றவர் வீட்டைப்பற்றி ஏதாவது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் எதையாவது திரித்துவிட்டுச் சிரித்து வேடிக்கை பார்ப்பவர்கள். எது உண்மை எது பொய் என்பதைப் பற்றி அவர்களுக்குத் தேவையில்லை. ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வரமாட்டார்கள். அவசரக் குடுக்கைகள். எப்பொழுதும் மற்

றவர் வீட்டுச் செய்தி என்றால் மணல் சர்க்கரை என்பவர்கள். இதுதானே இன்றைய உலகம்.

இதையெல்லாம் எண்ணித் தான் அவள் அப்படிக் கூறினாள்.

"அது...சரிதான்....நீ....என் மனைவியாக ஆனால்......அப் பொழுது என்ன சொல்லுவார் கள் ஊரார்!" என்றான் பிலீப்.

யாரும் பேசவில்லை. ஆனால் அறையின் உள்ளே ஏதோ உருண்டு விழுகின்ற சத்தம் கேட்டது.

உள்ளே நுழைந்தாள் அவள். சிமோன் கட்டிலிலிருந்து தூங் கிப் புரண்டு விழுந்திருந்தான். சிமோனுக்கு ஒன்றும் தெரி யாது. அவன் உதட்டிலே அன் னையின் அன்பு முத்தங்கள் அடுக்கடுக்காகப் பொருத்தப்பட் டன. பிறகே அவன் கண் விழித் தான். தூக்கம் கலையாத அந்த நேரத்திலும் அவன் வாய் "நீ அப்பாவல்லவாமே. அப்பாவாக இருந்தால் அம்மாவுக்குக் கணவ னாகவல்லவா இருக்கவேண்டும்" என்று முணுமுணுத்தது.

கண் கொட்டாது இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண் டிருந்த பிலீப்பின் முகத்திலே ஒரு புன்முறுவல் பூத்தது. அவனை வாரித தூக்கி மார்போ டணைத்து, "என் கண்ணே! கவ லைப்படாதே. அந்தக் கொடிய வர்களுக்கு இனிமேல் சொல். என் அப்பா 'பிலீப் ரெமி.' நீங் கள் ஏதாவது எனக்குக் கெடுதல் செய்தால் உங்கள் காதைத் திருகிவிடுவார் என்று சொல் லுடா கண்ணு சொல்" என் றான்.

மறுநாள் வழக்கம் போல வகுப்புத் தொடங்கியது. சிமோ னைக் குறும்பாகப் பார்த்துப் பார்த்துப் பழகிய கண்கள் பார்க்கத் தொடங்கின. சிமோன் முன் போலப் பேசாதிருக்க வில்லை. அவன் தன் சிறிய செவ் விரலை நீட்டி "என் அப்பா பிலீப் ரெமி. எனக்கு யாராவது கெடு தல் செய்தால் அவர்கள் காதைத் திருகுவதாகச் சொல்லச் சொன் னார்" என்று சற்றுப் பல்லைக் கடித்துக்கொண்டே கூறினான்.

ஆனால் இம்முறை யாரும் சிரிக்கவோ குறும்பு செய்யவோ முடியவில்லை. அதற்குள் ஊர் முழுமையும் அவன் தாயைப் பிலீப் மணந்துகொண்டான் என்ற செய்தி பரவிவிட்டது.

## சூழ்நிலை

சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் 28—6—51ல், பண்ணுருட்டி நா. இராசவேல் (புரட்சிக் கவிஞரின் மாணவர்) 'சூழ்நிலை' என்ற திங்கள் இதழின் ஆசிரியராகவும், வெளியிடுவோராகவும் தம் மைப் பதிவு செய்து கொண் டுள்ளார்.

## புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| எல்லைக்கு அப்பால் (டி. கே. சீனிவாசன்) | 0—8—0 |
| விஷக்கன்னிகை | 0—6—0 |
| ஆசைத்தம்பியின் அறைகூவல் | 0—3—0 |
| ஒய்வு நேரம் (C. N. A.) | 0—2—0 |
| கானகத்திலே காதல் (தணலன்) | 1–12—0 |
| அந்த இரவு (தணலன்) | 0—8—0 |
| தமிழுலகு [தமிழ் - தமிழர் - தமிழர் கடமை என்பதை விளக்கும் அரியநூல்] | 2—0—0 |
| கயிற்றில் தொங்கிய கணபதி (மு. கருணாநிதி) | 0—3—0 |
| வாழ முடியாதவர்கள் (மு. கருணாநிதி) | 0–12—0 |
| டாக்டர் அம்பேத்கார் | 0–12—0 |
| பெரிய இடத்துச் செய்தி (வாணிதாசன்) | 0—4—0 |
| திருக்குறள் திருத்திற்று (பூவண்ணன்) | 0—2—0 |
| அண்ணாவின் வர்ணனைகள் | 0—4—0 |

வியாபாரிகட்கு 25% கழிவு

ஐந்து ரூபாய்க்கு மேல் ஆர்டர் செய்பவர்கட்கு அனுப்பும் சிலவு இனும். தனிப்பிரதி வேண்டுவோர் மணியார்டர் செய்யவும்.

விவரங்கட்கு:

**செல்வ நிலையம்**

110, *A. P.* ரோட் :: சென்னை-7.



*Telegram:* 'PUNTCOMPANY' *Telephone:* 55085

## பண்ட் & கம்பெனி

(ESTD: 1890)

உறுதியான தோலினால் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சாண்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

**PUNT & COMPANY**

CHROME LEATHER WORKS

170, BROADWAY, G. T. MADRAS.



## K.P. கேஸ்ட்ராயில்



தனி சித்தாமணக்கு விதையிலிருந்து தயார் செய்தது. குமட்டல், கசப்பில்லாதது. குழந்தை முதல் விருத்தர் வரை உபயோகிக்கலாம். ரசாயன முறைப்படி தயார் செய்யப்பட்டது.

**K.P. கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்**

ஆர். எஸ். புரம்.... கோயமுத்தூர்.



அழகான கேசத்திற்கு
பிரஸிடெண்ட்
வெஜிடபிள் ஹேர் ஆயில்
உபயோகிக்கவும்.

RATHOD TRADING CO. SOWCARPET MADRAS. 1

## மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்திஞலும் எத்தனே மாதமாஞலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளே வாங்கி ஏமாருதீர்கள். விலே ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

## கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பேக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளே வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலே ரூ. 12-0-0 ஜெல்லி விலே ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு: *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

*NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st.,* கொழும்பு-1

## பொன்னி

சந்தா விவரம்

| | ஒரு ஆண்டு | ஆறுமாதம் |
|---|---|---|
| இந்தியா, இலங்கை | ரூ. 6—0—0 | ரூ. 3—0—0 |
| பர்மா, மலேயா முதலிய வெளிநாடுகள் | ரூ. 6-12—0 | ரூ. 3—6—0 |




ஆசிரியர் :

**கா. கணபதி B. A., B. L.,**

இக்கதைகள் அனைத்தும் மனித வாழ்க்கையில் காணப்படும் மேடுபள்ளங்கள், அவ்வப்போது வீசுகின்ற தென்றல், அடிக்கின்ற சூறாவளி இன்னபிற இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள வாழ்க்கைச் சித்திரங்கள்.

விலை ரூபாய் ஒன்று.

**எங்கள் இதர நூல்கள்**

ஆசிரியர் :

**டி. என். ராமச்சந்திரன்**

எழுதியவை.

| | |
|---|---|
| மாஸ்கோ பாதை | ரூ. 1—8—0 |
| சிந்தனைவாதிகளின் சத்திய சாதனை | ரூ. 0–12—0 |
| நமது சரித்திர பாரம்பர்யம் | ரூ. 2—0—0 |
| மீளாத காதல் [மாக்ஸிம் கார்க்கி] | ரூ. 1—0—0 |
| சாந்தி மொழி | ரூ. 0—4—0 |

—: விபரங்களுக்கு :—

**இமயப் பதிப்பகம்**

**நாகப்பட்டினம்.**

**சினிமா நடிகராவதற்கு**

**அரிய சந்தர்ப்பம்**



மாதம் ரூ. 100 முதல் ரூ. 1500 வரை சம்பாதிக்கலாம். போதிய படிப்பு இல்லாவிட்டாலும் தயக்கம் வேண்டாம். இன்றே எழுதுக.

கடிதம் ஆங்கிலத்தில்

*Director:-*

**ANAND FILM SERVICE**

*Near Sitla Temple (D 170) Amritsar*

' வழிப்போக்கன் '

வரைந்த எழுத்தோவியம்!

## அண்ணா யார்?

( இரண்டாம் பதிப்பு )

விலை எட்டணா.

விற்பனையாளர்க்கு 25% கழிவு. தனி இதழுக்கு 9 அணா ஸ்டாம்பு அனுப்புக.

○

—:விவரங்கட்கு:—

**செல்வம் பதிப்பகம்**

வெண்கலக்கடைத் தெரு,

**மதுரை.**



Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD. at PONNIAGHAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21.



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
19776

## நினைவுச் சின்னம்

ரூ. 1-0-0

தோழர் இளமைப்பித்தனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இது; தமிழ் மக்களின் தணியாத கலையார்வத்திற்கு இந்நூலின் கருத்தாழமே போதிய கலைச்சின்னம்.

## கடல் முத்து

ரூ. 1-0-0

முத்துக் கொணரும் சிற்பிகள், மூச்சை அடக்கி, மூவாயிரம் அடி ஆழம் அடியில் சென்று மக்களுக்கு நன்முத்துத் தருகின்றனர். நண்பர் ஆறுமுகம் இலக்கியக் கடலிலே மூழ்கி ஒப்பற்ற கதை முத்துக்களை வழங்கியுள்ளார்.

## உலக அரங்கில்

ரூ. 1-0-0

உலக அரங்கில், சிறுகதை மன்னர் தோழர் **T. K.** சீனிவாசன் சிந்தனை அரங்கைக் காட்டுகிறார். சிறுகதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொள்கைக்காகப் போராடுகின்றன. நல்ல கருத்துக் குவியல்.

## தபாலாபீஸ் விநோதங்கள்

ரூ. 0-8-0

பொதுமக்கள் அடிக்கடி கூடும் மனைகளில்தான் எத்தனை விந்தைகள் — எத்தனை கூத்துக்கள்! தபாலாபீஸ் சகல முனைகளும் குவியும் கூடம் — அங்கு நடக்கும் திருவிளையாடல்கள் ஒன்றா, இரண்டா? அதன் இனிய படப்பிடிப்புத்தான் நண்பர் க. சண்முகசுந்தரம் தீட்டியுள்ள கட்டுரைகள்.

விபரமான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

# பொன்னி லிமிடெட்

16, சேனியம்மன் கோவில் தெரு.

தண்டையார்ப்பேட்டை — சென்னை – 21

## திரையிடத் தயார்!

*சிறந்த ஹிந்திப் படங்கள்!*

ரெஹ்னா, தேவ் ஆனந்த், யாகூப் நடிக்கும்

## (DIL RUBA) தில் ரூபா

சுலோச்சனா, சாட்டர்ஜி, குல்தீப் நடிக்கும்

## (LADLI) லாட்லி

ரெஹ்னா, குல்தீப் நடிக்கும்

## (LAJAWAB) லா ஜவாப்

கீதாபலி, குல்தீப் நடிக்கும்

## (BANSARIA) பன்ஸாரியா

சாப்ரூ, நயாந்தாரா நடிக்கும்

## (HUA SAVERA) ஹுவா சவேரா

*தவறாது காணவேண்டியவை.*

மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
பூரண விநியோக உரிமையாளர்கள்:

## வீயார் பிலிம்ஸ்

தேவகோட்டை — இராமனாதபுரம் ஜில்லா.

VEEYAR FILMS — DEVAKOTTAI — RAMNAD DT.